உ

சிவமயம்

# திருப்புகலூர்த் தல வரலாறு


**G. கலியாணம் பிள்ளை,** B. A., Dip. Econ.

எழுதியது.


409


வெளியிட்டவர் :

திரு. C. மருதவாணம் பிள்ளை - *நிர்வாக தருமகர்த்தர்*

*வேளாக்குறிச்சி மடம் ஆதீனஸ்தர்களாகிய*

ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதிகள் - *பரம்பரை தருமகர்த்தர்*

திரு. R. இராதாகிருஷ்ண நாயுடு - *தருமகர்த்தர்*

திருப்புகலூர் தேவஸ்தானம்

**சாது அச்சுக்கூடம்,**

*இராயப்பேட்டை, சென்னை*

1942

# முகவுரை

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தினர், ஒவ்வொரு தலத்துக்கும் வரலாறு எழுதி, யாவர்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று எல்லா தேவஸ்தானங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை (Circular) விடுத்துள்ளனர். அச் சுற்றறிக்கையையொட்டியே திருப்புகலூர் வரலாறு என்ற இச்சிறு நூல் எழுதப்பட்டது. சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி - திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A., B. L., திருப்புகலூர்க் கோயிற் கல்வெட்டுக்களிலுள்ள விவரங்களைத் தொகுத்து முறைப்படுத்திச் செப்பம்செய்து கொடுத்ததுமன்றி, நூலில் சில அரிய திருத்தங்களையும் செய்து உதவினார்கள். இக்கோயிற் பொருளாளரான (Treasurer) திரு. N. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் இந்நூல் எழுதுவதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்துகொடுத்தார்கள். இவ்விருவர்க்கும் எனது நன்றியறிதலான வணக்கம் உரித்தாகுக. இத்திருப்பணியில் அடியேன் ஈடுபட, பூம்புகலூர் மேவிய புண்ணியனின் திருக்கருணை இருந்தவாறென்னே என்பதை எண்ணி இந்நூலை அவன் பொன்னடிக்குச் சமர்ப்பிக்கிறேன்.

சென்னை
25 - 1 - 42

G. கலியாணம்

உ
சிவமயம்

# திருப்புகலூர்த் தல வரலாறு

இடையறுப் பேரன்பு மழைவாரு மிணைவிழியும்
உழவா ரத்திண்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையறுச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம்.

## தலமும் இருப்பிடமும்

பொன்னி மாநதிப் புனல்மல்கி வளம் கொழிக்கும் புண்ணியம் பெற்றது சோழநாடு. அந்நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் பலவுள்ளன. அவைகளுள் சிறந்த தொன்று திருப்புகலூர். இத்தலம் தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலுகாவில் உள்ளது. தென் இந்திய இருப் புப்பாதை மாயவரம் - அறந்தாங்கிக் கிளையில் நன்னிலம் என்ற புகைவண்டி நிலையத்திலிறங்கி, கிழக்கே நாகூருக் குச் செல்லும் கற்சாலை வழியே மூன்றரை மைல் சென்று, பின்னர் வடக்கே இரண்டு பர்லாங்கு போனால் இத் தலத்தை அடையலாம். இது முடிகொண்டான் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது.


## கோயிலின் அமைப்பு

திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இருக் கின்றது. சுமார் 90 அடி உயரமுள்ள ஐந்துநிலைக் கோபுர மொன்று கோயிலின் வாயிலை அழகுபெறச் செய்கிறது. கோயிலின்பரப்பு சுமார் 73,125 சதுர அடி;

கீழ்மேல் மதில் நீளம் சுமார் 325 அடி; தென்வடல் மதில் நீளம் சுமார் 225 அடி. கோயிலில் இரண்டு பிராகாரங்கள் உள்ளன. மதிற்புறத்தே தோட்டம் இருக்கிறது. கோயிலையும் தோட்டத்தையும் சுற்றி நான்கு புறங்களிலும் நீர் நிறைந்த அகழ் சூழ்ந்திருக்கிறது. அவ்வகழின் அகலம் சுமார் 130 அடி இருக்கும்.

## தலத்தின் வேறு பெயர்கள்

இப்பொழுது இத்தலத்தின் வழங்கும்பெயர் திருப்புகலூர் என்பது. இப்பெயரே தேவாரம், பெரிய புராணம், இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் முதலியவைகளில் காணப்படுகின்றது. இதுவேயன்றி, புன்னுகவனம், சரண்யபுரம், சரண்யபுரி, இரக்தாரண்யம் என்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உள.




இரு மூலத்தானங்கள்: அக்னீசுவரர், வர்த்தமானீசுவரர்

## மூர்த்திகள்

திருக்கோயிலுள் இரண்டு மூலத்தானங்கள் உள்ளன. சுயம்பு மூர்த்தியான இறைவனுக்கு, புகலூர்நாதர், அக்னீசுவரர், அக்னிபுரீசுவரர், சரண்யபுரீசர், புன்னாக நாதர், பிரத்தியட்சவரதர், கோணப்பிரான் என்னும் பெயர்களும், அம்பிகைக்கு கருந்தாழ்குழலி, கருந்தார்க் குழலி, சூளிகாம்பாள் என்ற பெயர்களும் அமைந்துள்ளன. மற்றொரு மூலத்தானத்து உறையும் இறைவனுக்கு வர்த்தமானீசுவரர் என்றும், அம்பாளுக்கு மனோன்மணி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இச்சந்நிதியில் முருக நாயனார் திருவுருவம் இருக்கிறது. வர்த்தமானீச்சரத்திற்குத் தனியே சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றுண்டு. கோணப்பிரான், கருந்தாழ்குழலி என்ற பெயர்கள் தேவாரத்திலும், திருப்புகலூர் மகாதேவர், கைலாயமுடைய நாயனார், கோணற்பெருமாள் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இக் கோயிலில் சந்திரசேகரர் சந்நிதி அதிக விசேஷமுள்ளது.

கோயிலின் உட்பிராகாரத்துக் குள்ளேயே பூதேசுவரர், பவிஷ்யேசுவரர், அப்பர்சுவாமிகள், வாதாபி கணபதி முதலியோர்களின் விக்கிரகங்கள் காணப்படுகின்றன. வெளிப்பிராகாரத்தில் வடகிழக்குப் பாகத்தில் அம்பிகை சந்நிதி யிருக்கிறது.

கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தின் தென்மேற்குக் கரையில் சித்தர் கோயில் ஒன்று இருக்கிறது. புகலூர்மேவிய புண்ணியனைப் பதினெண் சித்தர்களும் வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. தெற்கு மடவிளாகத்தில் நெற்குன்றவாணர் வழிபட்ட ஞான விநாயகர் ஆலயம் இருக்கிறது. மற்ற விவரங்கள் படத்தில் கண்டு கொள்க.


225
34
25
35
39
இராஜ கோபுரம்
32
33
305

# படத்திலுள்ள எண்ணும் விவரமும்

1. சந்திரசேகரர்
2. அக்னீசுவரர்
3. வர்த்தமானீசுவரர்
4. மனோன்மணி
5. அகோரலிங்கம்
6. பூதேசுவரர்
6-A. தக்ஷணாமூர்த்தி
7. வாதாபிகணபதி
8. அப்பர்சுவாமிகள்
9. ததீசிமுனிவர் பூசித்த லிங்கம்
10. பராசரர் பூசித்த லிங்கம்
11. பிருகுமுனிவர் பூசித்த லிங்கம்
12. சுப்பிரமணியசுவாமி
13. சுப்பிரமணியர் பூசித்த லிங்கம்
14. நீலகண்டசிவாசாரியார் பூசித்த லிங்கம்
15. புலஸ்தியர்பூசித்த லிங்கம்
16. ஜாபாலி பூசித்த லிங்கம்
17. வாதராயர் பூசித்தலிங்கம்
18. மகாலக்ஷ்மி
19. சனீசுவரர்
20. அன்னபூர்ணி, சரஸ்வதி
21. நவக்கிரகம்
22. தலவிருக்ஷம்-புன்னை
23. பவிஷ்யேசுவரர்
24. வாமதேவர்பூசித்தலிங்கம்
25. சண்டேசுவரர்
26. நடராஜர்
27. அறுபத்துமூவர்
28. கருந்தார்க்குழலியம்மை
29. பள்ளியறை
30. சண்டிகேசுவரி
31. பாரத்துவாஜர் பூசித்த லிங்கம்
32. யாகசாலை
33. அப்பர்சுவாமிகள் ஐக்கியக் காட்சி
34. வசந்த மண்டபம்
35. மடைப்பள்ளி
36. சிந்தாமணீசுவரர்
37. விஷ்ணு பூசித்த லிங்கம்
38. நிர்த்தனகணபதி
39. நூற்றுக்கால் மண்டபம்
40. அக்னிதீர்த்த மண்டபம்
41. சித்தர்கோயில்
42. சந்நிதிபடித்துறை
43. நந்திகேசுவரர்
44. ஞானவிநாயகர்

## தீர்த்தங்கள், தல விருக்ஷம்

கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தை அக்கினி தீர்த்தம், பாண தீர்த்தம் என்று சொல்லுகின்றனர். அக்கினி பகவான் நான்கு மூலையுள்ளதாகத் தீர்த்தம் தோண்டி நடுவே இருந்து தவங் கிடந்ததால் அக்கினி தீர்த்தம் என்ற பெயரும், பாணுசுரன் தன் தாய்க்காக இத்தலத்திலுள்ள சுயம்பு லிங்கத்தை எடுத்துப் போக அசைத்துப்பார்க்க அது முடியாதபடியால் நாற்புறமும் தோண்ட உண்டானதால் பாணதீர்த்தம் என்ற பெயரும் திருக்குளத்திற்கு உண்டாயிற்றென்று இருவகைப்பட்ட செய்திகள் வட மொழித் தல மான்மியத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

"தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூர்" என்று அப்பர்சுவாமிகளும், "பொய்கை சூழ்ந்த புகலூர்", "பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற் புகலூர்" என்று சம்பந்தப் பெருந்தகையும், "பொய்கை சூழ்ந்த பூம்புகலூர்", "பூவிற் பொலி பொய்கைசூழ் புகலூர்" என்று சேக்கிழாரடிகளும் கூறியிருப்பதைக் கோயிலைச் சுற்றியுள்ள தீர்த்தத்திற்கே சிறப்பாகக் கொள்ளலாம் போலும்.

இத்தல விருக்ஷம் புன்னை. அது கோயிலின் உள் பிராகாரத்தில் வடபால் இருக்கிறது. இத்தலத்துத் தேவாரப் பதிகங்களில் "புன்னைப் பொழிற் புகலூர்", "புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூர்" என்று காணக்கிடக்கின்றது. "புன்னுகை மணங்கமழும் பூம்புகலூர்" என்று பெரியபுராணம் கூறுகின்றது.

## தலப் பெருமைகள்

"பொன்னிலங்கு மணிமாளிகை மேல்மதி தோயும் புகலூர்", "பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில் புகலூர் நகர்" என்று சம்பந்தரும் சேக்கிழாரும் போற்றிப் புகழ்ந்திருப்பது இத்தலத்தின் பெருமையை விளக்கும். முருக நாயனர் இப்பதியில் அவதரித்து எம்பெருமானுக்குப் பூத்தொண்டு புரிந்ததும், அவர் மடத்தில் அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலியோர் எழுந்தருளி உடனுறைந்ததும், அப்பமூர்த்திகள் ஈண்டு பல காலம் தங்கிப் பல பதிகங்கள் பாடி, செயற்கரிய அற்புதங்கள் பல நிகழ்த்தித் திருவடிப் பேறெய்தியதும், பொன் வேண்டும் விருப்புடைய சுந்தரர்க்காக செங்கற்களைப் பொன்னுக இறைவன் அருள் செய்ததும் ஆன நிகழ்ச்சிகள் இத்தலத்திற்கு மிக்க சிறப்புச் செய்வனவாகும்.

**முருகநாயனர் :** இந்நாயனர் இத்தலத்தில் அவதரித்த அந்தணப் பெரியார். சிவபெருமான் " சேவடிக்கீழ் ஊனமின்றி நிறை அன்பால் உருகும் மனத்தார்". பொழுது புலருமுன் எழுந்து, புனிதநீர் மூழ்கி, பல மலர்கள் கொய்து, வாசமாலை, கண்ணி, பிணையல், தொடையல் முதலிய பலவகை மாலைகள் கட்டி, தினந்தோறும் இறைவனுக்குச் சாத்தும் திருப்பணியை மேற் கொண்டிருந்தார். இவர் திருமடத்தில் அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலியோர் எழுந்தருளி




முருகநாயனர்

யிருந்து உடனுறைவின் பயன் பெற்றனர். இவர் திருநல்லூர்ப் பெருமணத்தில் சம்பந்தருடன் சோதி யிற் கலந்தனர். சம்பந்தர் வர்த்தமானீச்சரத் திருப் பதிகத்தில் "தொண்டர் தண்கயம் மூழ்கித் துணை யலுஞ் சாந்தமும் புகையும் கொண்டு கொண்டு அடிபர விக் குறிப்பறி **முருகன்** செய்கோலம்" என்றும், "மூசுவண் டறை கொன்றை **முருகன்** முப்போதுஞ் செய்முடிமேல் வாசமா மலருடையார் வர்த்தமானீச்சரத்தாரே" என்றும் இந்நாயனார் திருத்தொண்டைச் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார்.

**திருநாவுக்கரசுசுவாமிகள் :** திருஞானசம்பந்தர் முருக நாயனார் மடத்தில் தங்கியிருந்த பொழுது அப்பர் திருவாரூரில் திருவாதிரை விழாக்கண்டு மகிழ்ந்து அங் கிருந்து திருப்புகலூருக்கு வந்தார். சம்பந்தர் அடியார் குழாத்துடன் சென்று அவரை எதிர்கொண்டழைத்து வந்து "ஆரூரில் கண்ட சிறப்பை வகுத்துரைப்பீராக" என்று சொன்னார். வாகீசரும் "முத்து விதானம் மணிப் பொற்கவரி" என்று தொடங்கும் திருவாரூர் திருவா திரைப் பதிகத்தை ஓதியருளினார். சம்பந்தர் திருவாரூர் சென்று வணங்கி மீண்டும் திருப்புகலூர் வந்தார். திரு நீலநக்கரும், சிறுத்தொண்டரும் திருப்புகலூர் வர யாவரும் முருகநாயனார் மடத்தில் தங்கி, திருப்பதிகச் செந்தமிழின் திறத்தையும், அடியார் பெருமையையும் பாராட்டித் தம்முள் அளவளாவி மகிழ்ந்தனர். அப்பர் பெருமான் அங்கிருந்து நீங்கிப் பல பதிகளைத் தரிசித்து விட்டுக் கடைசியாகத் திருப்புகலூர்க்கேவந்துசேர்ந்தார். அப்பொழுது, நின்ற திருத்தாண்டகம், நீடுதிருத்தாண்ட


கம், திருப்பதிகள் கூறுந் திருத்தாண்டகம், திருநேரிசை, ஆருயிர் விருத்தம், தசபுராணம், பாவநாசப் பதிகம் முதலியவற்றைத் திருவாய் மலர்ந்தருளினர். அப்பரின் உழவாரத் திருப்பணியை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு அவர் பணிசெய்யும் இடமெங்கும் பொன்னும் மணியும் நிறைந்து விளங்கும்படி இறைவன் திருவருள் செய்தார். ஆளுடைய அரசர் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நிலையிலிருந்து, அவற்றையும் பருக்கைக் கற்களையும் ஒரு தன்மையனவாகவே கருதி இருவகைக் கற்களையும் வாரிப் பொய்கையில் எறிந்தார். பின்னர் தெய்வ மகளிர் அவர்முன் தோன்றி ஆடிப்பாடி மையல் விளைக்க முயன்றனர். அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும் அப்பமூர்த்திகள் தம் சித்தநிலை திரியாது செய்பணியில் தலைநின்றார். தம்மிடம் அரம்பையர்க்குச் செயலில்லை யென்பதை "பொய்மாயப் பெருங்கடலில்" என்ற திருத்தாண்டகம் பாடிக் குறிப்பித்தார். அவ்வளவில் அவர்கள் அகன்றனர். திருநாவுக்கரசர் இன்னுஞ் சிலகாலம் இங்கிருந்து பல திருவிருத்தங்கள் பாடினார். ஒரு சித்திரைத் திங்கள் சதய நன்னாளிலே, "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ" என்ற தொடக்கத்துத் திருத்தாண்டகம் முதலாகப் பத்துப் பாட்டுகளிலும் "உன்னடிக்கே போதுகின்றேன்



அப்பர் : மூலவர்

பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று சொல்லி, எய்துதற்கரிய சிவானந்த ஞானவடிவேயாகி எம்பெரு மான் திருவடிக்கீழ் இரண்டறக் கலந்தனர்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் :** திருவாரூரில் பங்குனி உத்தரத் திருநாள் வந்தது. அவ்விழாவில் செலவிற்காகப் பரவையார்க்குப் பொன் கொடுக்கவேண்டி யிருந்தமை யின் அதற்காகச் சுந்தரர் திருப்புகலூர் வந்தார். வந்து இறைவனைத் தொழுது கோயிலில் திருப்பணிக்காக வைத்திருந்த செங்கற்களில் பல கொண்டுவரச் செய்து, தலையணையாக வைத்துத் துயில் கொண்டார். விழித் தெழுந்தபொழுது செங்கற்கள் பொன்னாகி யிருந்ததைக் கண்டார். உடனே இறைவன் திருவருளை வியந்து "தம் மையே புகழ்ந்து இச்சை பேசினும்" என்ற தொடக் கத்துப் பாசுர முதலாக ஒரு திருப்பதிகம் பாடினார்.



அப்பர் : உத்ஸவமூர்த்தி

## திருவிழாக்கள்

சித்திரைமாதச் சதயத் தைப் பத்தாம் நாளாகக் கொண்ட அப்பர் சுவாமிகள் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. அவர் வரலாறு முழுவதும் அவ் விழாவில் கீழ்க் கண்டவாறு கொண்டாடப் பெறுகின் றது :—

**1-வது நாள் :**—திருவதிகை வீரட்டானேசுவரக் "கூற்று யினவாறு" என்னும் திருப்பதிகம் ஓதி அப்பர் தமக்குற்ற சூலைநோயை நீக்கிக் கொண்ட வரலாறு.

**2-வதுநாள் :**—அரசன் ஏவலால் அப்பர் திருநீற்றறையுள் இடப்பட அங்கு "மாசில் வீணையும்" என்னும் பதிகம் பாடித் துன்புறாது இனிது வீற்றிருந்த வரலாறு.

**3-வது நாள் :**—விஷங் கலந்த சோறு கொடுக்கப்பட்டதை யுண்டும், தம்மைக் கொல்லவந்த யானையை "சுண்ண வெண்" என்ற பதிகம் பாடித் தடுத்தும் அப்பர் தீங்குறா திருந்த வரலாறு.

**4-வது நாள் :**—கல்லிற் பிணைத்துக் கடலில்போட, "சொற்றுணை வேதியன்" என்ற பதிகமோதி அக்கல்லே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூரில் கரையேறிய வரலாறு.

**5-வது நாள் :**—திருப்பெண்ணாகடத்தில் "பொன்னார் திருவடிக்கு" என்ற திருப்பதிகம் பாடி, தமது திருத்தோட் களில் சூலக் குறியும் இடபக் குறியும் பெற்றுக்கொண்ட வரலாறு.

**6-வது நாள் :**—திருச்சத்திமுற்றத்தில் "கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன் பூவாரடிச் சுவடென் மேற் பொறித்துவை" என்று வேண்டியபடி திருநல்லூ ரில் சிவபெருமானது திருவடி தீக்ஷைபெற்ற வரலாறு.

**7-வது நாள் :**—(காலை) - திங்களூரில் விஷம் தீண்டி இறந்த அப்பூதியடிகள் குமாரரை "ஒன்று கொலாம்" என்ற பதிகம்பாடி உயிர்ப்பித்த வரலாறு.

(இரவு) - திருப்பழனம் தரிசித்து, 'சொன்மாலை பயில் கின்ற' என்ற பதிகத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்த வரலாறு.

**8-வது நாள் :**—(காலை)-திருவீழிமிழலையில் பஞ்சம்தீரப் படிக்காசு பெற்ற வரலாறு.

(இரவு) - திருமறைக்காட்டில் 'பண்ணினேர் மொழி யாள்' என்னும் பதிகம் பாடி மறைக்கதவம் திறப்பித்த

தும், திருவாய்மூரில் விருஷபாரூடராய்க் காட்சிபெற்றதும் ஆன வரலாறுகள்.

**9-வது நாள் :**—(காலை) - திருப்பழையாறை வடதளியில் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தைத் 'தலையெலாம்' என்ற பதிகம் பாடித் துதித்த வரலாறு.

(இரவு) - அப்பர் கைலையில் ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு பொய்கையில் எழுந்து கைலாயக் காட்சிபெற்ற வரலாறு.—சுவாமி விருஷபாரூடராய் எழுந்தருளல்.

**10-வது நாள் :**—(காலை) - திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் சிவபெருமான் அந்தணராய்த் தோன்றிக் கொடுத்தருளிய கட்டமுதுண்ட வரலாறு.

(மாலை) (i) உழவாரப் பணிசெய்யும் இடமெங்கும் பொன்னும் நவமணியுமா யிருக்க அவைகளைப் பருக்கைக் கற்களோடு பொய்கையில் எறிந்த வரலாறு.

(ii) அரம்பையர் அவர் முன் ஆடல் பாடல் செய்ய, "பொய்மாயப் பெருங்கடலில்" என்ற பதிகம் பாடி அவர்கள் மனநிலை சோரச்செய்த வரலாறு.

(இரவு) - "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே" என்ற பதிகம் ஓதி எம்பெருமான் திருவடிக்கீழ் இரண்டறக் கலந்த வரலாறு.—புஷ்ப விமானக் காட்சி.

வைகாசி மாதத்தில் பருவத்தைப் பத்தாம் நாளாகக் கொண்டு பஞ்ச மூர்த்திகளுக்கும் பிரமோத்ஸவம் நடைபெறுகின்றது. புகலூர் நாதர் சந்திரசேகரராய்த் தோன்றி அக்கினி பகவானுக்குக் காட்சி கொடுத்த வரலாற்றை முன்னிட்டு சந்திரசேகரசுவாமிக்கு இவ்வுத்ஸவத்தில் 5-ஆம் நாள் வசந்தோத்ஸவமும், 9-ஆம் நாள் மகா ரதோத்ஸவமும், 10-ஆம் நாள் பக்தகாட்சி உத்ஸவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

மற்ற மாதங்களிலும் சிவாலயங்களில் நடைபெற வேண்டிய விழாக்களும் குறைவற நிகழ்கின்றன. நாள் தோறும் ஆறுகால பூசைகள் செவ்வனே செய்யப்படு கின்றன. திருவிழாக்கள், நித்திய பூசை முதலியவற்றிற் கெல்லாம் கோயிற் சொத்து வருமானத்திலிருந்தே செலவு செய்யப்படுகின்றது.

## ஆலய நிர்வாகம்

இக்கோயிலுக்குச் சொந்தமாகச் சுமார் 160 வேலி நன்செயும், 40 வேலி புன்செயும் ஆக 200 வேலி (1330 ஏக்கர்) நிலங்களும், சில வீடுகளும் இருக்கின் றன. நன்செயிலிருந்து 15,000 கல நெல்லும், புன்செயி லிருந்து ரூ. 2000-மும், சர்க்கார் மோகினி ரூ. 1517-ம் ஆகமொத்த ஆண்டு வருமானம் சுமார் ரூ. 35,000. ஆண்டின் மொத்த செலவு ரூ. 30,000. இதில் சர்க்கார் கிஸ்தி மாத்திரம் ரூ, 10,000. சுமார் ரூ. 15,000 மதிப் பிடக்கூடிய திருவாபரணங்கள் உள்ளன.

இவ்வாலய நிர்வாகம், கீழ்த்தஞ்சை ஜில்லா கோர்ட் டில் நடந்த ஸ்கீம் வழக்கின் முடிவுப்படி, சென்னை எண்டௌமெண்ட் போர்டார் மேற்பார்வையிலிருந்து வருகின்றது. அந்த ஸ்கீம் திட்டம் 1-7-1935 முதல் நடைமுறையில் இருக்கிறது. அதன்படி வேளாக்குறிச்சி ஆதீனஸ்த தருமகர்த்தர் ஒருவர், எண்டௌமெண்ட் போர்டாரால் நியமிக்கப்படும் தருமகர்த்தர்கள் இருவர் ஆக மூவர் அடங்கிய போர்டின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றது. இவர்களின் கீழ் தேவஸ்தான வேலைகள் எல்லாவற்றையும் பார்ப்பதற்கு ஒரு பொருளாளர் (Treasurer) இருக்கின்றனர்.

## புராண வரலாறு

திருப்புகலூருக்குத் தமிழ் மொழியில் தல புராணம் ஒன்றுமில்லை. தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி புத்தக சாலையில் ஏட்டுப்பிரதியாக வடமொழியில் "சரண்யபுர மாஹாத்ம்யம்" என்ற நூல் ஒன்று இருக்கின்றது. அது ஆக்னேய மகா புராணத்தில் ஸ்தான வைபவ காண்டத்தில் 180 முதல் 188 முடிய ஒன்பது அத்தியாயங்களில் பிரமதேவர் நாரதருக்குச் சொல்லியதாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்கினிபகவான், தான் எதையும் புசிக்கின்றவன் என்ற நிந்தை தீர, புன்னாகவனத்தை (புகலூரை) அடைந்து நாற்புறங்களிலும் தீர்த்தம் தோண்டி நடுவே இருந்து தவம் செய்ய இறைவன் காட்சி தந்தருளினனென்பதும், வாதாபி வில்வலன் என்ற அசுரர்களின் கொடுமைக்காற்ருது, அவ்விருவரும் அகஸ்தியரால் ஒழிக்கப்படும்வரையில் தேவர்கள் புகலூரில் தங்கியிருந்ததனால் சரண்யபுரம் என்ற பெயர் வந்ததென்பதும், இரக்தன் என்ற அசுரன் கேசி என்ற மற்ருெரு அசுரனால் கொல்லப்படும் வரையில் இவ்விடத்திலிருந்து சிவபூசை செய்துவந்ததால் இரக்தாரண்யம் என்ற பெயரெய்தியதென்பதும், தன் தாயின்பொருட்டு இத்தலத்திலுள்ள சுயம்பு லிங்கத்தை எடுத்துச் செல்ல அசைத்துப் பார்த்து முடியாது வருந்திய பாணாசுரனின் வேண்டுகோளுக்கிரங்கி சுயம்பு மூர்த்தி சிறிது வடபுறம் தலைசாய்த்தாரென்பதும், காசியபர், ஜமதக்கினி, வியாசர், பரத்துவாஜர் என்போர் இங்கே இலிங்கங்கள் ஸ்தாபித்து வழிபட்டனரென்பதும், பிரவரர் என்ற இராஜரிஷி விஷ்ணு விக்கிரக நாசஞ் செய்ததால் நரகமடைய, அவர் சந்ததியில் வந்த

வீரசேனன் என்பான் புன்ஞைகநாதரை வந்து பூசித்த தால் அப்பிரவரர் சுவர்க்கமடைந்தார் என்பதும், பஞ் சாக்கரம், விபூதி, உருத்திராக்கம் ஆகியவைகளின் மகிமை, தேர், திருக்கல்யாணம் முதலிய திருவிழாக்க ளின் பெருமை முதலியன இன்னவென்பதும் அந்நூலில் வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன.

## கர்ண பரம்பரைக் கதைகள்

அப்பர்பெருமானை ஆண்டவன் சிங்க ரூபமாக வந்து விழுங்கினன் என்ற ஒரு கதை வழங்குகின்றது. அதற்கு, அவர் கடைசிக்காலத்தில் பாடிய திருத்தாண் டகச் செய்யுள் ஒன்றில், "சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்" என்று கூறியிருப்பதை ஆதாரமாகச் சொல் கின்றனர். அன்றியும், சிங்கம் அப்பரை விழுங்குவது போன்று ஒரு கற்சிலை உருவம் அம்பிகை கோயிலின் பிராகாரத்தில் அமைத்திருப்பதையும் சான்ருகக் கூறு கின்றனர். சேக்கிழார் பெரிய புராணத்தில் திருநாவுக் கரசர் திருவடிப்பேறடைந்த செய்தியைப் பின்வருமாறு கூறியிருக்கின்ருர் :—"புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன் எனப்புகன்று, **நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந் திருந்தார்.**"

இனி, நெற்குன்றவாணர் என்பவர் இத்தலத்தைப் பற்றி அந்தாதி எழுதியதற்கு ஒரு கதையும் வழங்குகிறது. தொண்டைநாடு சிலகாலம் சோழ மன்னர் ஆதிக்கத்தி லிருந்தது. அக்காலத்தே ஜெயங்கொண்ட சோழ மண்ட லத்தில் புலியூர்க்கோட்டத்தில் நெற்குன்றம் என்ற ஊரில் பெருநிலக்கிழார் ஒருவர் இருந்தார். அவர் சிவ பக்தியிற் சிறந்தவர்; தமிழ்ப் புலமை வாய்ந்தவர். பஞ்

சத்தின் கொடுமையால் அரசனுக்கு அவர் கட்டவேண்டிய வரியைச் செலுத்த முடியவில்லை. அந்நிலையில் அவருக்கு மிக்க ஈடுபாடுள்ள திருப்பதியான திருப்புகலூரை யடைந்தார். வரி செலுத்தாமையால் அவரைச் சிறைப் படுத்த அரச ஆணை பிறந்தது. ஏவலர் தேடிச் சென்று அவரைத் திருப்புகலூரில் கண்டு உத்தரவை அறிவித்தனர். வழக்கம்போல் தாம் திருப்புகலூர் நாதரைத் தரிசித்துப் பின் வந்துவிடுவதாக அவர்களிடம் அனுமதி பெற்று, பொய்கையில் நீராடி முதலில் ஞானவிநாயகர் ஆலயத்தை அடைந்து கீழ்க்காணும் செய்யுளைப் பாடினார் :—

" உரைசெய் மறைக்கும் தலைதெரி யாவொரு
கொம்பையென்றே
பரசுமவர்க்குப் பெருநிழ லாக்கும்
பழனமெல்லாம்
திரைசெய் கடற்றுறைச் சங்கமு லாவுந்
திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி யீன்றவோர்
அத்திநின்றே "

அவ்வமயம், சிவபக்தியும் செல்வமும் நிறைந்த அவ்வூர்த் தேவரடியாளான ஒரு பெண் அங்குவர அப் பாட்டு அவள் காதில் விழுந்தது. இச்செய்யுளைப் போன்று இத்தலத்துச் சிவபெருமானையும் பாடினால் நன்றாக இருக்குமே என்று எண்ணிய அவள் வாய்விட்டு " இச்செய்யுளை ஒரு அந்தாதிக்குக் காப்புச் செய்யுளாக் கலாமே " என்று சொன்னாள். நெற்குன்றவாணர் திரும்பினார் ; ஒரு பெண் நின்றிருப்பதைப் பார்த்தார். " ஆம், செய்யலாம் ; அந்தாதிக்குக் காப்பாக்கினால் அரசிறைக்குப் பொருளாகுமா ? " என்று அவரையும் அறியாது

தம் நிலைமையைக் கூறிவிட்டு மனக்கலக்கத்துடன் நின்றார். அவர் சொல்லியதன் பொருள் இன்னதென்று தெரியாமல் அவ்வம்மையார் திகைத்தார். அவ்வளவில் அங்கு நின்றிருந்த அரச ஏவலாளர் அவரை வரிப்பணம் கொடாமைக்குச் சிறைப்படுத்தப்போகும் செய்தி தெரிவிக்க, அப்பெண்மணி அவர் செலுத்தவேண்டிய முழுத் தொகையையும் தானே கொடுத்து அவரை மீட்டாள். நெற்குன்றவாணரும் தாம் பாடிய செய்யுளைக் காப்பாகக் கொண்டு, "திருப்புகலூரந்தாதி" என்ற நூலை இயற்றியருளினர். கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் அவரைப்பற்றிய குறிப்புப் பின்வருமாறுகாணப்படுகிறது:— "நம்பியார் குளத்தின் தென்கரையிலே நித்தம் பன்னிரண்டு பிராமணர் உண்பதாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துப் பேரூர் நாட்டு நெற்குன்றத்து **நெற்குன்றங்கிழார்** அரயன் கருவுண்யகரான களப்பாளராஜர் செய்வித்த சாலை".

## இத்தலத்தைப் பற்றிய நூல்கள்

**(1) தேவாரம்:** சம்பந்தர் மூன்று பதிகங்களும் (33 பாடல்கள்), அப்பர் ஐந்து பதிகங்களும் (44 பாடல்கள்), சுந்தரர் ஒரு பதிகமும் (11 பாடல்கள்) பாடியிருக்கின்றனர். இவையேயன்றி, "முத்துவிதானம் மணிப் பொற்கவரி" என்றும், பொய் மாயப்பெருங் கடலில்" என்றும் தொடங்கும் இரு திருவாரூர்ப் பதிகங்களும், நின்ற திருத்தாண்டகம், நீடுதிருத்தாண்டகம், திருப்பதிகள் திருத்தாண்டகம், திருநேரிசை, ஆருயிர் விருத்தம், தசபுராணம், பாவநாசப் பதிகம் முதலிய பதிகங்களும் அப்பர் இத்தலத்திலேயே பாடியதாகச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியிருக்கின்றனர்.

***(2) பதினொராந்திருமுறை :*** (i) **பரணதேவ நாய னார்** *சிவபெருமான் திருவந்தாதியில் பின்வரும் இரண்டு பாடல்கள் கூறியுள்ளார் :—*

*" என்றும் மலர்தூவி யீசன் திருநாமம்*
*என்றும் அலர்தூற்றியேயிருந்தும்—என்றும்*
*　　　*　　　*　　　*
***புகலூரா** புண்ணியனே என் "*

*" **புகலூர்** உடையாய் பொறியரவம் பூணி*
***புகலூர்ப்** புனற்சடையெம் பொன்னே—புகலூராய்*
*வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்றாய்*
*வெண்காடா என்பேனோ நான் "*

*(ii)* **பட்டணத்துப் பிள்ளையார்** *திருவேகம்ப முடையார் திருவந்தாதியில் " நினைவார்க்கருளும் பிரான் " என்று தொடங்கும் பாட்டில் " புனைவார் சடையோன்* **புகலூர்** *" என்று கூறியிருக்கிறார்.*

*(iii)* **நம்பியாண்டார் நம்பி** *கூறுவது :—*

*"பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்*
*மதியஞ் சடையாற் கலர்தொட் டணிபவன் யான்மகிழ்ந்து*
*துதிஅங்கழற்சண்பை நாதற்குத்தோழன்வன் தொண்டன்அம்*
*அதிகம் பெறும்**புகலூர்** முருகன்எனும் அந்தணனே' '[பொன்*

*"பல்லவை செங்கதிரோனைப் பறித்தவன் பாதம்புகழ்　[ள*
*சொல்லவன்தென் **புகலூரரன்** பால்துய்ய செம்பொன்கொள்*
*வல்லவன் "*

***(3) பெரிய புராணம் :*** *முருகநாயனார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், ஏயர்கோன்கலிக்காமர் இவர்களுடைய வரலாறுகளில் திருபுகலூரைப் பல பாடல்களில் சேக்கிழார் விதந்தோதி யிருக்கின்றார்.*

**முருகநாயனார்** புராணத்தில் திருநீற்றுப் பெருமையைப் பின்வருஞ் செய்யுளில் சிறப்பித்திருக்கின்றார் :—

"நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம்போல்
அவரணிந்த
சேமம்நிலவு **திருநீற்றின்** சிறந்த வெண்மைத்
திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல
விரைமலர்மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்க மின்றி
விளங்குமால்"

**திருநாவுக்கரசருக்குப்** புகலூர் மேவிய செல்வனிடம் மிக்க பக்திமேம்பாடுள்ளது என்பதை "திருப்புகலூர் அமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட்டேத்தும் விருப்புடைய உள்ளத்து மேவிஎழுங் காதல்புரி வேட்கை கூரப்" போந்தார் என்றும், "தேம்பொழியும் செந்தமிழ் நாட்டினிலெங்கும் சென்றிறைஞ்சிப்... பூம்புகலூர் வந்தடைந்தார் பொய்ப்பாசம் போக்குதற்கு" என்றும் அவர் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

**திருஞானசம்பந்தர்** திருத்தொண்டர்களுடன் திருப்புகலூர் வந்தார். முருகநாயனார் அவரை எதிர்கொண்டழைத்தார். முதலில் ஆளுடைய பிள்ளையார் வேத முதல்வர் கோயிலை வணங்குவதற்காகச் சென்றார். அதைச் சேக்கிழார்,

"புக்கெதிர் தாழ்ந்து விழுந்தெழுந்து
பூம்புக லூர்மன்னு புண்ணியரை
நெக்குருகுஞ் சிந்தை அன்புபொங்க
நிறைமலர்க் கண்ணீர் அருவிசெய்ய

மிக்கதமிழ்த் தொடைமாலை சாத்தி
  மேவிய ஏழிசை பாடிப்போந்து
திக்குநிறை சீர்முருகர் முன்பு
  செல்ல அவர்மடஞ் சென்றுபுக்கார் ''

என்று மிக அழகாகக் கூறுகின்றார்.

**சுந்தரர்** பொன் வேண்டிப் புகலூர் வந்தது ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் பின் வருமாறு உரைக்கப்பட்டிருக்கிறது :—

'' செறிபுன் சடையார் திருவாரூர்
  திருப்பங்குனி யுத்தரத் திருநாள்
குறுக வரலும் பரவையார்
  கொடைக்கு விழாவில் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு
  நினைந்து நம்பிதிருப் புகலூர்
இறைவர் பாதம் பணியஎழுந்
  தருளிச் சென்றங் கெய்தினார் ''

(4) **திருப்புகலூர் அந்தாதி :** நூற்றொரு செய்யுட்களையுடையது. இயற்றியவர் நெற்குன்றங்கிழார். இவர் வரலாறு முன்னர்க் கூறப்பட்டிருக்கிறது. இவ்வந்தாதியை இந்நூலின் இறுதியில் காண்க.

(5) **சரண்யபுர மாஹாத்ம்யம் :** வடமொழி நூல். ஒன்பது அத்தியாயங்கள் உடையது. நூற்சுருக்கம் முன்பு கூறப்பட்டிருக்கிறது. ஏட்டுப் பிரதியாக, தஞ்சாவூர் அரண்மனை சரசுவதி புத்தகசாலையில் இருக்கிறது. இதனைத் தமிழில் போலகம்—சிரோமணி திரு. K. நாராயண சாஸ்திரிகள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அச்சிடப் பெறவில்லை.

## கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. 67 கல்வெட்டுக்களை அரசாங்கக் கல்வெட்டிலாகா அதிகாரிகள் படியெடுத்து A. R. Nos. 42 to 108 of 1928 என்று பதிவு செய்திருக்கிறார்கள். இவற்றுள் திருமுறைகண்ட சோழனான முதல் இராஜராஜன் (கி. பி. 985 - 1012) காலத்தவை 14-ம், அவனுடைய மகன் முதல் இராஜேந்திரன் (கி. பி. 1012 - 1045) காலத்தவை 3-ம், முதல் குலோத்துங்க சோழன் (கி. பி. 1072 - 1117) காலத்தவை 12-ம், மூன்றாங் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178 - 1218) காலத்தவை 10-ம், பிறவும் உள்ளன.

முதல் இராஜராஜன் காலத்துக்கு (கி. பி. 985 - 1012) முந்திய கல்வெட்டுக்கள் கோயிலில் காணப்படாமையால் பெரும்பாலும் இக்கோயில் செங்கல் திருப்பணியாக இருந்து அவ்வரசன் காலத்துக்கு முன்பு கருங்கல் கட்டிடமாக ஏற்பட்டிருத்தல் கூடும். இக்கோயில் சாசனங்களுள் முதல் இராஜராஜன், முதல் இராஜேந்திரன் இவர்களுடைய கல்வெட்டுக்கள் இரண்டாம் பிராகாரத்துக் கல்வெட்டுக்களுள் காணப்படாமையால் அப்பிராகாரம் இவர்கள் காலத்துக்குப் பின்பு ஏற்பட்டிருத்தல் கூடும்.

இத்திருக்கோயில் அர்த்தமண்டபத்தைக் கட்டினவன் ஸ்ரீ இறையூருடையான் அரையன் கங்கைகொண்டானான சோழவிச்சாதரப் பல்லவரையன் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. முதல் பிராகாரத் தெற்குத் திருவாயிலுக்கு இராஜராஜன் திருவாசல் என்ற பெயர் வழங்கியதை அவ்வாயிலின்மீதுள்ள ஒரு கல்வெட்டு

தெரிவிக்கின்றது. கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள நீராழிப் பத்திமண்டபத்தைச் செய்தவன் பெயர் ஆர்க்காடு கிழான் சேதிராயன் என்பதை அப்பத்தியின் தூணிலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயிலில் நரலோக வீரன் திருமண்டபம் என்று ஒரு மண்டபம் இருந்ததை ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. அது இப்பொழுது கோயிலுக்கு வெளியிலுள்ள நூற்றுக்கால் மண்டபமாக இருத்தல்கூடும். கோயில் திருமதில் திருப்பணி "வேளாக்குறிச்சி மகாதேவ பண்டாரத்தின் சிஷ்யனுகை அருணுசலத் தம்பிராஞல்" சாலிவாகன சகாப்தம் 1581 (கி. பி. 1659)ல் முடித்த செய்தியை ஒரு கல்வெட்டால் அறிகிறேம். இத்திருக்கோயில் நான்கு புறத்திலும் திருக்குளம் சூழ்ந்திருப்பதை இன்று நாம் பார்க்கிறேம். இவ்வாறே பழைய காலத்திலும் இருந்ததென்பதை மூன்ரும் குலோத்துங்கன் காலத்திய (கி. பி. 1178-1218) இரண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன. "திருப்பொய்கைக் கரை சூழ்ந்த" என்ற குறிப்பு இவைகளில் காணப்படுகின்றது. இக்கோயிலுக்கு இராஜாக்கள் தம்பிரான் திருவீதியமைக்கப்பட்டதை மேற்கூறிய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இவ்வூருக்கருகிலுள்ள எயினங்குடி (ஏனங்குடி) எயினனூர் (ஏனநல்லூர்), தோட்டக்குடி, வயலூர், கயத்தூர், நன்னிலம் முதலிய பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

பனையூர் நாட்டுப் பிரமதேயம் என்று திருபுகலூர் கூறப்படுகிறது. இப்பனையூர் நாட்டை உள்ளடக்கிய வளநாடு, முதல் இராஜராஜன் காலத்தில் க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, மும்முடிச் சோழ வளநாடு என்றும்,

முதல் குலோத்துங்கன் காலத்திலும் பின்பும் குலோத் துங்க சோழ வளநாடு என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

திருக்கோயில் மூலத்தானத்திலுள்ள சிவலிங்க மூர்த்திக்குக் கோணப்பெருமான் என்ற பெயர் உண்மை யைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மூலத்தான சுயம்புலிங்கத் திருமேனி சிறிது வட புறமாகச் சாய்ந் திருப்பதை இன்றும் நாம் காணலாம். திருநாவுக்கரசர் திருவிருத்தத்தில் "தொல்லை நீர்ப்புகலூர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே" என்று அருளி யிருக்கிறார். கோயிலிலுள்ள விநாயகருக்கு வாதாபி கணபதி என்ற பெயரும் கல்வெட்டிற் காணப் படுகின்றது. கலியாணசுந்தர தேவர், சிவபுரத்துத் தேவர், காமேசுவரமுடைய மாதேவர், சூரியதேவர் முதலிய மூர்த்தங்களை எழுந்தருளுவித்து, அவைகட்குத் திருமஞ் சனம் திருவமுது முதலிய நிபந்தங்கள் ஏற்படுத்திய செய்தியைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். இத்திருக் கோயில்திருப்பள்ளிக்கட்டில் நம் பிராட்டியாருக்கு இரா ஜாதிராஜ சோழன் காலத்தில் ஒரு கல்வெட்டின் மூலம் நிபந்தம் ஏற்பட்டிருந்தமையால் அவ்வரசன் காலம் வரை யில் அம்பிகைக்குத் தனிக்கோயில் (திருக்காமக்கோட் டம்) ஏற்படவில்லையென்று ஊகிக்கலாம்.

திருப்புகலூரில் திருநாவுக்கரசர் நெடுநாள் தங்கி, பல பதிகங்கள்பாடி, திருவடி முத்தியெய்திய செய்தியை நாம் நன்கு அறிவோம். அவர் திருக்கோயில் ஒன்று இப் போது பிராகாரத்தில் உள்ளது. இம்மூர்த்திக்கு முதல் இராஜராஜ சோழன் காலத்திலேயே (கி பி. 985-1012) நித்திய பூசைக்கு நிபந்தம் ஏற்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. ஒரு கல்வெட்டில்

"குளிச்செழுந்த நாயனுர்" என்ற குறிப்பு காணப்படு கிறது. இந்நாயனுர் திருநாவுக்கரசராகவே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. கைலேயில் ஒரு தடா கத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு திருக்குளத்தில் இந்நாயனுர் எழுந்த ஒரு அற்புதத்தை இவ்வாறு இக் கல்வெட்டுக் கூறுகிறது.

இத் திருத்தலத்தில் அவதரித்த முருகநாயனுர் அப்பரடிகள் காலத்திலேயே இருந்து புஷ்பத்தொண்டு செய்து முத்திபெற்ற வரலாற்றை முன்னரே கண்டோம். இவர்பேரால் 'நம்பிமுருகன் திருமடம்' என்ற ஒருமடம் இருந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இன்னும் திருநீலகண்டயாழ்ப்பாணரையும், திருநீலநக்கரையும் 'தருமபுரத்து நாயனுர்', 'யாழ்மூரி நாயனுர்', 'நக்க நாயனுர்' என்ற குறிப்புக்களால் கல்வெட்டுக்களில் அறியலாம்.

இத்தலத்தில் மாதச் சதயம் சிறப்பாகக் கொண்டா டப்பட்டு வருகிறது. பெரிய புராணத்துள் 63 நாயன் மார் வரலாறுகள் காணப்பட்டபோதிலும் திருநாவுக் கரசர் சித்திரைச் சதயத்தைத் தவிர வேறு எந்த நாயன் மாருக்கும் திருநக்ஷத்திரம் குறிக்கப்படவில்லே. அப்பர் திருநக்ஷத்திரம் அவர் முத்திபெற்ற தலத்தில் மாதந் தோறும் கொண்டாடப்படுவது மிகவும் போற்றத்தக் கதே. முதல் இராஜராஜ சோழனும், அவன் பிராட்டி பஞ்சவன்மாதேவியும் பிறந்தநாள் சதயம் ஆனபடியால் அவ்வம்மையார் ஒரு நிபந்தம் ஏற்படுத்தியிருந்ததையும், அத்திருநாளில் அஷ்டமங்கலம் பிடிக்கும் விவரத்தையும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அப்பர்சுவாமிகட்குச் சித் திரைச் சதயத்தையொட்டிப் பத்து நாட்கள் விழாவும், வைகாசிமாதத்தில் பத்து நாட்கள் திருவிழாவும் நடந்து

வருகின்றன. இவ்விரண்டு திருவிழாக்களும் இம்மாதங்களில் நடைபெற்றதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

முற்காலத்தில் கர்ணம் ஒருவர் மிகுந்த மதிப்புடையவராக இருந்தபடியால் அவருடைய ஞாபகார்த்தமாக சித்திரைத் திருநாளில் ஐந்தாம் நாள் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று ஸ்நபனம் வைத்துத் தீர்த்தம் கொடுத்துத் திருவிழா நடப்பதற்கும், கோயிலில் நூலேற்றுக்கு (யக்ஞோபவீதம் தருவதற்கு)ம் நிபந்தங்கள் ஏற்படுத்தியதும், தினந்தோறும் கோதண்டராமன் சந்தி, வீரபாண்டியன் சந்தியென்ற கட்டளைகளை அரசவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்தியதும் கல்வெட்டுக்களிலிருந்து அறிகிறோம். நாள்தோறும் திருப்பள்ளித்தாமம் (மாலை) தொடுப்பதற்காக நந்தன வனங்கள் வைத்த செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நந்தனவனத்து ஒன்றின் பெயர் "பொன் வேய்ந்த சோழன்" என்று குறிக்கப்படுகிறது. செங்கழுநீர்த் தாமம் ஆக்குவதற்கு ஒரு குளம் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டதையும், நாள்தோறும் ஆற்றிலிருந்து காவிரிநீர் திருமஞ்சனத்துக்குக் கொண்டுவர நிபந்தம் ஏற்பட்டிருந்ததையும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இத்தலத்தின் தென்பால் ஓடும் முடிகொண்டான் ஆற்றின் முழுப்பெயர் 'முடிகொண்ட சோழப் பேராறு' என்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இக்கோயில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வார் நிலை தேவாரத்துப் பெரிய உடையார்க்குத் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வாரில் ஒருவருக்கும், அவர் வர்க்கத்தாருக்கும் காணியாகக் கொடுத்த நிபந்த விவரத்தை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கோயிலில் திருநாவுக்கரைய தேவர்க்கு நிவேதனம் செய்யப்படும் பிரசாதத்தை சிவயோகிகளும் அபூர்விகளுமே பெறவேண்டுமென்றும், இவர்களுக்கென்றே குளக்கரையில் மடம் ஏற்பட்டிருந்ததென்றும் கல்வெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதம் வல்ல பிராமணர்களுக்கும் இவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அக்காலத்தில் நல்லொழுக்கமுடைய யோகி ஒருவர் அரசனின் நன்மையை நாடித் தினந்தோறும் திருப்புகலூருடையாரைத் தொழுதிருக்க திருமட விளாகத்துக்கு வடகிழக்கே சேரமான் தோழன் கேட்டுக்கொள்ள ஒரு குகை எடுக்கப்பட்டிருந்ததும், கோயிலுக்குத் திருவாபரணங்கள் கொடுத்ததும், திருவிளக்குகளுக்காக நிபந்தங்கள் ஏற்படுத்தியதும் சில கல்வெட்டுக்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

இக் கல்வெட்டுக்களில் வேறு பல செய்திகளும் காணப்படுகின்றன. அவற்றுள் உதாரணமாக சிலவற்றைக் கீழே காணலாம். அக்காலத்தில் வலங்கை இடங்கை என்ற ஜாதிப்பிரிவு இருந்தது. திருமுறைகள் மக்களால் மிகுதியும் கையாளப்படுவதைக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'இம்மையே தருவான்,' 'பொய்யாத சேவடி', 'ஒளிவளர் விளக்கு' என்ற சொற்றொடர்களால் அறிகிறோம். இவ்வூரிலுள்ள சுவாமியின் பெயரை மக்களுக்குக் 'கோணல் மாதேவன்', 'கோணல் வடுகன்' என்று வைக்கும் வழக்கமிருந்திருக்கிறது. கோயில் தச்சனின் உரிமைகளைப்பற்றிக் கூறியிருக்கிறது. கோயிலுக்குச் சொந்தமான கிராமங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. முடிகொண்டான் ஆற்று வடகரையில் மனதுக்கினியான் என்பான் செய்வித்த ஆதுலர்சாலைக்கு நிலம் விடப்பட்டிருக்கிறது. திருப்புகலூரந்தாதி பாடிய நெற்குன்றவாணரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

## பிற குறிப்புக்கள்

கோயிலுள்ளே தேவாரப் பதிகங்கள் மூவர் உருவங்களுடன் அழகிய வர்ணங்களால் தீட்டப்பெற்றிருக்கின்றன. கோயிலுக்கு வெளியே பெரிய வளைவுடைய நூற்றுக்கால் மண்டபம் ஒன்றிருக்கின்றது. தேவஸ்தான காரியாலயத்தின் அருகில் மூன்றரை ஏக்கர் பரப்புள்ள ஒரு நந்தனவனம் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

இவ்வூரில் அப்பர்சுவாமிகள் மடம் இருக்கிறது. காரைக்குடி திரு. பெரி. ஆ. அள. அரு. தேனப்ப செட்டியார் பசுமடம் ஏற்படுத்தி யிருக்கிறார். நாள்தோறும் கோயில் அபிஷேகத்திற்கு நாலுபடி பால் அங்கிருந்து வருகிறது.

இவ்வூர் ஜனத்தொகை சுமார் 1741 ஒரு தபாலாபீஸ் இருக்கிறது. நன்னிலத்திலிருந்து மோட்டார் வண்டிகள் போகின்றன. இவ்வூருக்கருகே திருச்செங்காட்டங்குடி, திருமருகல், திருச்சாத்தமங்கை, திருக்கண்ணபுரம் (வைணவத் தலம்) முதலிய திருப்பதிகள் இருக்கின்றன.

## திருஇராமனதீச்சரம்

இத்தலம் திருப்புகலூரிலிருந்து திருச்செங்காட்டங்குடிக்குப் போகும் வழியில் சுமார் ஒரு மைல் தூரத்தில் திருக்கண்ணபுரத்தருகில் இருக்கிறது. கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் இருக்கின்றன. மூலத்தானம் பெரியமகாலிங்கமாக இருக்கிறது. கோயி[illegible]யில்லை. இராமபிரான் இவ்விடம் வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. இத்தலத்திற்குச் சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றுண்டு. நித்திய பூசை நைமித்திகங்கள் திருப்புகலூர் தேவஸ்தானத்திலிருந்து குறைவற நடந்து வருகின்றன. இக்கோயிலும் திருப்புகலூர்க் கோயில் தருமகர்த்தர்கள் மேற்பார்வையிலிருந்து வருகிறது.

சிவமயம்

# திருப்புகலூர் தேவாரப் பதிகங்கள்

## சம்பந்தர்

### பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

குறிகலந்தஇசை பாடலினன்நசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனுயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடம்மொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. 1

காதிலங்குகுழை யன்இழைசேர்திரு மார்பன்ஒருபாகம்
மாதிலங்குதிரு மேனியினன்கரு மானின்உரியாடை
மீதிலங்கஅணிந் தானிமையோர்தொழ மேவும்இடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. 2

பண்நிலாவும்மறை பாடலினனிறை சேரும்வளையங்கைப்
பெண்நிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழுதேத்த
உள்நிலாவியவர் சிந்தையுள்நீங்கா வொருவன்னிடமென்பர்
மண்நிலாவும்அடி யார்குடிமைத்தொழில் மல்கும்புகலூரே. 3

நீரின்மல்குசடை யன்விடையன்அடை யார்தம்அரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினலுயர் வெய்தும்புகலூரே. 4

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்அடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. 5

கழலினோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்

விழவிளைசையடி யார்மிடைவுற்று விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவிளைசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. 6

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தஅடி யார்தொழுதேத்த வுகக்கும்அருள்தந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வளம் மல்கும்புகலூரே. 7

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடிதிண்தோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்இடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி தோயும்புகலூரே. 8

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்அடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னொடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தஎரி யாய்மிகவோங்கிய எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்நிழலான்மது வாரும்புகலூரே. 9

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. 10

புற்றில்வாழும்அர வம்அரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர் காழியுள்ஞானசம் பந்தன்தமிழ்மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர் பரமன்அடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

## பண் - பியந்தைக் காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடும் நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும் பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே. 1

முயல்வ ளாவிய திங்கள் வாண்முகத் தரிவையில் தெரிவை
இயல்வ ளாவிய துடைய இன்னமிர் தெந்தையெம் பெருமான்
கயல்வ ளாவிய கழனிக் கருநிறக் குவளைகள் மலரும்
வயல்வ ளாவிய புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 2

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 3

பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல ருத
விண்ண வண்ணத்த ராய விரிபுக லூரரொர் பாகம்
பெண்ண வண்ணத்த ராகும் பெற்றியொ டாணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே. 4

ஈசன் ஏறமர் கடவுள் இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன்மூப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 5

தளிரி ளங்கொடி வளரத் தண்கயம் இரியவண் டேறிக்
கிளரி ளம்முழை நுழையக் கிழிதரு பொழிற்புக லூரில்
உளரி ளஞ்சுனை மலரும் ஒளிதரு சடைமுடி யதன்மேல்
வளரி ளம்பிறை யுடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 6

தென்சொல்விஞ்சமர் வடசொல்திசைமொழியெழில்நரம்பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய அலைகடல் கடையஅன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமா னீச்சரத் தாரே. 7

சாம வேதமோர் கீதம்ஓதிஅத் தசமுகன் பரவும்
நாம தேயம துடையார் நன்குணர்ந் தடிகளென் றேத்தக்
காம தேவனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணர்
வாம தேவர்தண் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 8

சீர ணங்குற நின்ற செருவுறு திசைமுக னோடு
நார ணன்கருத் தழிய நகைசெய்த சடைமுடி நம்பர்
ஆர ணங்குறும் உமையை அஞ்சுவித் தருளுதல் பொருட்டால்
வார ணத்துரி போர்த்தார் வர்த்தமா னீச்சரத் தாரே. 9

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையி னுல்தம்
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யென விரும்பேல்
செய்யில் வாளைக ளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே. 10

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புக லூரில்
மங்குல் மாமதி தவழும் வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான சம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்தவல் லார்கள் எய்துவர் இமையவ ருலகே. 11

திருச்சிற்றம்பலம்

## பண் - சேவ்வழி

திருச்சிற்றம்பலம்

வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள் பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுரம்ஓ ரம்பால்எரி யூட்டிய
எங்கள்பெம்மான் அடிபரவ நாளும்இடர் கழியுமே. 1

வாழ்ந்தநாளும் இனிவாழு நாளும்இவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லிர்காள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னன்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் உடையீர்கள் உங்கள்துயர் தீருமே. 2

மடையின்நெய்தல் கருங்குவளை செய்யமலர்த் தாமரை
புடைகொள்செந்நெல் விளைகழனி மல்கும்புக லூர்தனுள்
தொடைகொள்கொன்றை புனைந்தானோர் பாகம்மதி சூடியை
அடையவல்லார் அமருலகம் ஆளப்பெறு வார்களே. 3

பூவும்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார்செவித் துளைகளால்
யாவுங்கேளார் அவன்பெருமை யல்லால்அடி யார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாளென் றுள்ளங்கொள்ளவே. 4

அன்னங்கன்னிப் பெடைபுல்கி யொல்கியணி நடையவாய்ப்
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும்புக லூர்தனுள்
முன்னம்மூன்று மதிலெரித்த மூர்த்திதிறங் கருதுங்கால்
இன்னரென்னப் பெரிதரியர் ஏத்தச்சிறி தெளியரே. 5

குலவராகக் குலம்இலரு மாகக்குணம் புகழுங்கால்
உலகில்நல்ல கதிபெறுவ ரேனும்மலர் ஊறுதேன்
புலவெல்லாம் வெறிகமழும் அந்தண் புகலூர்தனுள்
நிலவமல்கு சடையடிகள் பாதம் நினைவார்களே. 6

ஆணும்பெண்ணும் மெனநிற்ப ரேனும்அர வாரமாப்
பூணுமேனும் புகலூர்தனக் கோர்பெரு ளாயினன்
ஊணும்ஊரார் இடுபிச்சை யேற்றுண்டுடை கோவணம்
பேணுமேனும் பிரானென்ப ரால்எம்பெரு மானையே. 7

உய்யவேண்டில் எழுபோத நெஞ்சேயுயர் இலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினால்
செய்கைதோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே. 8

நேமியானும் முகநான் குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமிதாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ
பூமியெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூரையே. 9

வேர்த்தமெய்யர் உருவத் துடைவிட் டுழல்வார்களும்
போர்த்தகூறைப் போதிநீழ லாரும் புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த தேவன்திறங் கருதுங்கால்
ஓர்த்துமெய்யென் றுணராது பாதந்தொழு துய்ம்மினே. 10

புந்தியார்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிப்பூச வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா அனலாட லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி யாடக்கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

# அப்பர்

## பண் - இந்தளம்

### திருச்சிற்றம்பலம்

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. 1

மேகநல் லூர்தியர் மின்போல் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையோர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 2

பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 3

அக்கா ரணிவடம் ஆகத்தர் நாகத்தர்
நக்கா ரிளமதிக் கண்ணியர் நாடொறும்
உக்கார் தலைபிடித் துண்பலிக் கூர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. 4

ஆர்த்தா ருயிரடு மந்தகன் றன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாளுட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடையாரே. 5

உதைத்தார் மறலி உருளவோர் காலால்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 6

தூமன் சுறவந் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலங் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே. 7

கரிந்தார் தலையர் கடிமதின் மூன்றுந்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ லுண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனற் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 8

ஈண்டா ரழலி விருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்த மென்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே. 9

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தா ரிலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்து மாயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

## திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

**ப**கைத்திட்டார் புரங்கள் மூன்றும் பாரிநீ றாகி வீழப்
புகைத்திட்ட தேவர் கோவே பொறியிலே னுடலந் தன்னுள்
அகைத்திட்டங் கதனை நாளும் ஐவர்கொண் டாட்ட வாடித்
திகைத்திட்டேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 1

மையரி மதர்த்த வொண்கண் மாதரார் வலையிற் பட்டுக்
கையெரி சூல மேந்துங் கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே யடைக்குப்போ தாவி யார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூர னீரே. 2

முப்பது முப்பத் தாறு முப்பது மிடுகு ரம்பை
அப்பர்போ லைவர் வந்து அதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்றா லுய்யுமா றறிய மாட்டேன்
செப்பமே திகழு மேனித் திருப்புக லூர னீரே. 3

பொறியிலா அழுக்கை யோம்பிப் பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றேன் நீதனே நீதி யேதும்
அறிவிலே னமரர் கோவே அமுதினை மனனில் வைக்குஞ்
செறிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 4

அளியினார் குழலி னார்க ளவர்களுக் கன்ப தாகிக்
களியினார் பாட லோவாக் கடவூர்வீ ரட்ட மென்னுங்
தளியினார் பாத நாளும் நினைவிலாத் தகவில் நெஞ்சந்
தெளிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 5

இலவினார் மாதர் பாலே இசைந்துநா னிருந்து பின்னும்
நிலவுநாள் பலவென் றெண்ணி நீதனேன் ஆதி யுன்னை
உலவிநா ளுள்க மாட்டே னுன்னடி பரவு ஞானஞ்
செலவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 6

காத்திலே னிரண்டும் மூன்றுங் கல்வியே வில்லை யென்பால்
வாய்த்திலே னடிமை தன்னுள் வாய்மையால் தூயே னல்லேன்
பார்த்தனுக் கருள்கள் செய்த பரமனே பரவு வார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புக லூர னீரே. 7

நீருமாய்த் தீயு மாகி நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி யிமையவ ரிறைஞ்ச நின்று
ஆய்வதற் கரிய ராகி யங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவார் திருப்புக லூர னாரே. 8

மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோ ருபாயம் பற்றி உகக்கின்றே னுகவா வண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீ ரவர்களே வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூர னீரே. 9

அருவரை தாங்கி னானும் அருமறை யாதி யானும்
இருவரு மறிய மாட்டா ஈசனா ரிலங்கை வேந்தன்
கருவரை யெடுத்த ஞான்று கண்வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார் திருப்புக லூர னாரே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

தன்னைச் சரணென்று தானடைந் தேன்தன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே. 1

பொன்னை வகுத்தன்ன மேனிய னேபுணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்த னேதமி யேற்கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங் கும்புக லூரரசே
என்னை வகுத்திலை யேலிடும் பைக்கிடம் யாதுசொல்லே. 2-3

பொன்னள வார்சடைக் கொன்றையி னாய்புக லூரரசே
மன்னுள தேவர்கள் தேடு மருந்தே வலஞ்சுழியாய்
என்னள வேயுனக் காட்பட் டிடைக்கலத் தேகிடப்பார்
உன்னள வேயெனக் கொன்றுமி ரங்காத வுத்தமனே. 4-9

ஓணப் பிரானு மொளிர்மா மலர்மிசை யுத்தமனும்
காணப் பராவியுங் காண்கின் றிலர்கர நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத் தோன்தொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே. 10

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

**து**ன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் திங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. 1

இரைக்கும் பாம்பு மெறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்
புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்வி யொள்வளை சோருமே. 2

ஊச லாம்அர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்
ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே. 3

மின்னின் நேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. 4

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் நெஞ்சுமே. 5

அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு
பண்டு நான்மறை யோதிய பாடலன்
தொண்ட ராகித் தொழுது மதிப்பவர்
புண்ட ரீகத்து ளார்புக லூரரே. 6

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே. 7

பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே. 8

பொன்னொத் தநிறத் தானும் பொருகடல்
தன்னொத் தநிறத் தானு மறிகிலாப்
புன்னைத் தாது பொழிற்புக லூரரை
என்னத் தாவென என்னிடர் தீருமே. 9

மத்த னாய்மதி யாது மலைதனை
எத்தி னான்றிரள் தோள்முடி பத்திற
ஒத்தி னான்விர லாலொருங் கேத்தலும்
பொத்தி னான்புக லூரைத் தொழுமினே. 10

திருச்சிற்றம்பலம்

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

**எ**ண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்

ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 1

அங்கமே பூண்டாய் அனலா டினுய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினுய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்ருய்
பளிக்குக் குழையினுய் பண்ணு ரின்சொல்
மைவிரவு கண்ணுளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினுய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி அலர்மேலான்
நீர்மேலான் ஆய்ந்துங் காணுப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா

காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாதே சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே

அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரர்

பண் - கோல்லி

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலவீர்
அடுக்குமேலம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. [காள்

காணியேற்பெரி துடையனேகற்று நல்லனேசுற்ற நன்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண் புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாயம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 3

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துடல் நடுங்கிநிற்குமிக் கிழவனை
வரைகள்போல்திர டோளனேயென்று வாழ்த்தினுங்கொடுப் பாரிலை

புரைவெள்ளேறுடைப் புண்ணியன்புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையனாயம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப் பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று பாடினுங்கொடுப் பாரிலை [காள்
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலவீர்
நெஞ்சில்நோயறுத் துஞ்சுபோவதற் கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்று நரைத்தமாந்தரை யிளையனே
குலமிலாதானைக் குலவனேயென்று கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந்தோளனேயென்று நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றேபுல வோர்க்கெலாமென்று சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன்றுகண் குழியாதேயெந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போ யண்டமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலு மீக்குமீகில னாகிலும்
வள்ளலேயெங்கள் மைந்தனேயென்று வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற் கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று மொழியினுங்கொடுப் பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டறாப்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனாயம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கோர் காமனேசால நலவழகுடை யையனே
கையுலாவிய வேலனேயென்று கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கைவாவியின் மேதிபாய்புக லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாரம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங் கமலமோங்குதென் புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன்வ னப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற் கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

நெற்குன்றவாணர் இயற்றிய

# திருப்புகலூரந்தாதி

## காப்பு

உரைசெய் மறைக்குந் தலைதெரி யாவொரு கொம்பையென்றே
பரசு மவர்க்குப் பெருநிழ லாக்கும் பழனமெல்லாந்
திரைசெய் கடற்றுறைச் சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி யீன்றவோ ரத்திநின்றே.

## நூல்

பூக்கம லத்து விழிவளர் வானென்றும் போற்றியவூர்
மாக்கம லத்து மகிழ்கின்ற வூர்மது வானிறைந்த
தேக்கம லத்து வழியே பரக்குந் திருப்புகலூர்
நோக்கம லத்துயர் சோதிநெஞ்சே நம்மை நோக்குதற்கே. 1

நோக்கம ருக்கும் விழிச்செல்வர் பாற்கவி நூறுரைத்துத்
தாக்கம ருக்கு முருகா வருளென்பர் தண்செருந்தி
பூக்கம ருக்குல வும்புக லூரைப் போற்றியுய்யார்
பாக்கம ருக்குத் தென்கொல் சொல்வாணர் பரிவிதுவே. 2

பரிக்கு மரிக்கு விழியான பங்கயஞ் செங்கையிலே
கிரிக்கு மரிக்கு மருவுமெய் போதுங் கிளர்விசும்பில்
அரிக்கு மரிக்கு மயனுக்கு மேற்பத மன்பர்க்கென்றே
தெரிக்கு மரிக்குலஞ் சூழ்புக லூரர்தஞ் சேவடியே. 3

சேவடி வந்திப் பவர்வினை தீர்ப்பவர் தென்னன்முன்னே
மாவடி வந்திக்கு மண்சுமந் தோர்மரு வும்புகலூர்த்
தூவடி வந்திப் புறுநிற வெற்கண் சுடர்க்குழைமேற்
றுவடி வந்திப் படியென தாவி தளர்வித்ததே. 4

வித்தக னத்துப் பனையசெம் மேனியன் வெவ்வழற்கண்
மத்தக னத்துப் பயில்புக லூரன்முன் மாதர்சொல்லார்
அத்தக னத்துப் பொடியாய் மடிந்த வனம்பசலம்
ஒத்தக னத்த தனத்திடை யேபட் டுழைக்கின்றதே. 5

உழைக்கை யிலைத்தரு வெவ்வாய் மழுப்படைக் குற்றகையர்
கழைக்கை யிலைக்குன்றர் தென்புக லூரிலென் கண்ணகலாப்
பிழைக்கை யிலைக்கொடி யென்றழு தேற்குப் பெருங்களிற்றின்
புழைக்கையிலைப் பொலிவேலாற் றடிந்தெம்மைப் போமென்றதே.

போமென் றுவந்திப் புதுமாலை மேல்வரும் போதுநெஞ்சம்
வேமென்று வந்தித் திவள்கிடந்தாள் செய்யின் மென்கழுநீர்
ஆமென்று வந்திக் கருந்துந் திருப்புக லூரிறைவர்
தாமென்று வந்தித் தனிகெடுப்பார் கொன்றைத் தாரளித்தே. 7

தாரக் கடுக்கை யவர்க்கென்ற போதெம்மைத் தாயரெல்லாஞ்
சேரக் கடுக்கை திருவுள மோதெளி யாவிருவர்
பேரக் கடுக்கை யணிபுக லூரிற் பெருந்தகையே
ஆரக் கடுக்கைம் மலர்மீது கொண்ட வருட்கடலே. 8

கடற்றானை மானும் விசும்பும் வெளாமற் கறுத்ததிரு
மிடற்றானை யானை யுரித்த பிரானை வெகுண்டிலங்கை
உடற்றானை யூரும் புகலூ ரனைத்தொழு தொண்டொடிக்கை
அடற்றானை மாரன்கை யம்புபெற் றாள்பெற் றதத்தனையே. 9

அத்தக் கமல மனவைய மேற்கின்ற வையர்துய்ய
புத்தக் கமல வடிவி லுள் ளார்க்கிடம் புண்டரிக
சுத்தக் கமல வயற்புக லூருமெய்த் தொண்டர்கடஞ்
சித்தக் கமலமும் வேதங்க ணான்கன் சிரங்களுமே. 10

சிரந்தரிக் குங்கையர் தென்புகலூரரென் சிந்தையுள்ளே
கரந்தரிக் குந்தெரி யாதபொற் பாதர் கறையரவும்
பரந்தரிக் கும்புனற் பாகீர தியும் பனிமதியும்
நிரந்தரிக் குஞ்சடை யார்நகை போல நிலாவருமே. 11

வருகாவி ரிக்கெதிர் மாமல ராடையை மாரற்கம்பு
தருகாவி ரிக்கும் புகலூ ரிறைவர் தமதுதில்லைக்
கருகாவி ரிச்சுர நீர்கடந் தீரினி யம்புயத்தேன்
பருகாவி ரிப்பித்து வண்டிசை பாடும் பழனங்களே. 12

ஙங்களங் கம்பித் திடரொழித் தார்புக லூரர்நல்லோர்
தங்களங் கம்பித் திடநூன் மொழிபவர் தம்புயத்துந்
திங்களங் கம்பித் திகைசேர் முடியிலுஞ் சேர்கொன்றைகாள்
உங்களங் கம்பித் திகைபோற் பசப்ப துரைசெயுமே. 13

உரைத்தவப் பாவைமுற் சங்கத்தி லேறிநின் றோதுமைய
வரைத்தவப் பாவை மகிழ்புக லூரவிண் மண்ணழல்கால்
இரைத்தவப் பாவை யெனவுன்னை யேத்து மவரொடென்னை
நிரைத்தவப் பாவை யடியே னயர்ப்பினு நின்னருளே. 14

நின்னகத் தைப்பணிந் தேத்தா தெடுத்தவ னீண்முடிதாட்
பொன்னகத் தைக்கொண் டடர்த்தவனே புகலூரரசே
பன்னகத் தைப்படுத் தோதத்தின் மேவுவர் பல்சமயஞ் [ளே.
சொன்னகத் தைப்பழித் தைந்தெழுத் தோதுமெய்த் தொண்டர்க

தொண்டக லாமதி யன்பர்க் கருள்புக லூரன்றுண்ட
விண்டக லாமதி வேணிப்பி ரான்செங்கை வீணைதந்த
பண்டக லாமதி சீதள மென்சொற் பசுந்திருவே
கொண்டக லாமதி வள்ளல்வந் தானெஞ்சிற் கொள்வதன்றே. 16

கொள்வன சங்கத்த வேலோன் பலியவன் கொள்வதன்று
தெள்வன சங்கத் தறநூலை யாய்தலிற் செங்கழுநீர்ப்
புள்வன சங்கத் தறமேதி மேயும் புனற்புகலூர்க்
கள்வன சங்கத் தனிக்குழைப் பாகமின் கைதொழவே. 17

தொழுந்துதிக் கைக்குப் புகலூ ரெதுவென்னுஞ் சொன்னவப்போ
தெழுந்துதிக்கைக்குறித்தெங்கள்பிரானென்னுமீசனென்னும் [பின்
விழுந்துதிக்கைக்குன்றமொன்றுரித்தோனென்னும்வெண்ணெருப்
கொழுந்துதிக் கைக்குப் பகல்போன தென்னுமென் கோமளமே. 18

கோமள வாமத்தர் பத்தர் நித்தஞ்செய் குறைபெறினுந்
தாமள வாமத்தர் தென்புக லூரர் தருக்களைந்தின்
றேமள வாமத்தஞ் சேகரத் தேற்பவர் சேவடிநாம்
போமள வாமத் தனிக்குமுன் னேவந்து போதென்னுமே. 19

போதகத் தாவர் புணரியி லாவர்வெம் போர்விரும்பும்
பாதகத் தாவர் பதத்திலு மாவர் பகைப்புரத்தே
தீதகத் தாவ ரணமுகத் தானவ தென்புகலூர்
வேதகத் தாவர வென்றுகொண் டேத்திய மெய்யன்பரே. 20

அன்ப ரதத்துக் களைவந்து மாற்றிய வர்க்கலகைத்
துன்ப ரதத்துப் பவந்தீர்த் தருள்வன சொல்லரிய
இன்ப ரதத்துக் கனங்குழை பாக ரெயிற்புகலூர்
மன்ப ரதத்துணைப் பாதங்க ளான வனசங்களே. 21

வனகன கற்பகக் காவன சோலை வயற்புகலூர்
அனகன கத்தி லமர்ந்தவ னேயகி லாண்டவல்லி
தனகன கத்தில்லை யம்பலத் தாடிய சங்கரனே
நினகன கக்கொன்றை மாலையென் னாள்வந்து நேர்படுமே. 22

படவர வப்பணி மெய்ப்புக லூரர்பொற் பாவைகொண்ட
விடவர வப்பணி நீண்முடி யாரிமை யோர்பரவு
நடவர வப்பணி பூண்டபொற் றாளினர் நன்னுதன்மேல்
அடவர வப்பணி யேவிய வேளை யறிந்திலரே. 23

அறிவரி யாரு மயனுங் கெடக்கரந் தாடுமையர்
பொறிவரி யாருமெய்ப் பூணுடை யார்புக லூரரையென்றும்
பிறிவரி யாருமை பங்கர்கங் காளர் பிறங்கலின்மேற்
செறிவரி யாருந் தழையோ சிலைசில சேவகர்க்கே. 24

சேவக ராகவத் தக்கன் றிரட்டிய தேவரைக்கொல்
பாவக ராகவ னேத்தும் பதத்த பணிவண்டுசூழ்
பூவக ராகவ னந்திக ழும்புக லூரரவென்னைக்
காவக ராகவ ருத்தந் தவிரக் கடுக்கைதந்தே. 25

தந்த மருந்துயர் தீர்வன வாகச் சதுமுகன்மால்
வந்த மருந்துய் தென்புக லூரர் வரையின்மதன்
முந்த மருந்துணை யாகநின் றேற்கொரு மொய்குழல்போல்
இந்த மருந்துய வந்ததென் காத விடும்பைகண்டே. 26

கண்டரி கைக்குப் படையளித் தோர்தண்டைக் காலுங்கையும்
பண்டரி கைக்குப் பசித்துவந் தோர்பயி லும்புகலூர்ப்
புண்டரி கைக்கு நிகரா மிவடன் பொருட்டரசே
மண்டரி கைக்குங் கரியாற் றிரவு வருவதன்றே. 27

அன்றரத் தக்க வின்மூவி லைவே லரரியதில்லை
மன்றரத் தக்க விதிவேள்வி செற்றவர் வண்புகலூர்த்
தன்றரத் தக்கவிர் மேனியர் தாந்தொழுந் தாளர்நல்கார்
மின்றரத் தக்க விடைக்கழ லாய்நிற்கும் வெண்ணிலவே. 28

நிலாவம் பராவிதழ்க் கொன்றைவைக் குஞ்சடை நின்மலனே
இலாவம் பராவியற் றென்புக லூரவென் றேத்துதற்குக்
கலாவம் பராவி கவர்கின்ற கூற்றெனக் காதையடர்ந்
துலாவம் பராவிக் கழிக்கின்ற வாலின்றெ னுள்ளத்தையே. 29

உள்ளத் திருக்குந் திருப்புக லூர ருணருமன்பர்
கள்ளத் திருக்குங் கவலையுந் தீர்ப்பவர் கற்பவெல்லை
வெள்ளத் திருக்கும் பதினு லுலகும் விழாமலுய்யக்
கொள்ளத் திருக்குங் குமமுலை சேர்புயக் குன்றத்தரே. 30

குன்றருந் துந்திரை வேலையர் கோகன கத்தர்கொன்றைப்
பொன்றருந் துங்கச் சடாடவி யார்புக லூரர்தம்மை
வென்றருந் தும்பையும் வாகையுஞ் சூடிய வில்லிதென்றற்
கன்றருந் துங்கொடி மேலெய்யு மாறென்கொல் கற்பித்ததே. 31

கற்பனை யத்தனை யென்பிற விக்கினிக் கார்மதத்துப்
பொற்பனை யத்தனைப் பெற்ற வனைப்புக லூரரசை
வெற்பனை யத்தனை வேதங்க ளறிய வெண்டலையோட்
டற்பனை யத்தனை யான்மற வேனெழுத் தஞ்சுகொண்டே. 32

அஞ்சக் கரவரி யற்புக லூர ரயின்மழுவாட்
கஞ்சக் கரவ ரிகழா தணிவன கங்கைதிங்கட்
பிஞ்சக் கரவரி சூழ்கொன்றை வாசம் பெறுவெருக்கு
வெஞ்சக் கரவரி கண்மலர் நான்முகன் வெண்டலையே. 33

தலைக்கண் ணியன்சடைத் தென்புக லூரன் றகையெருக்கின்
குலைக்கண் ணியந்தொடை சாத்தும் பிரான்குன்ற மீன்றவல்லி
முலைக்கண் ணியன்கங்கை நாயகன் மாலை முடிவுமெய்தா
தலைக்கண் ணியன்புற் றழுவதெவ் வாறவ் வலங்கலுக்கே. 34

அலங்கலை யிற்கயல் பாய்புக லூர ரவிர்சடைமேற்
சலங்கலை யிற்குறை திங்கள்வைத் தோர்தமைச் சாரலர்போற்
கலங்கலை யிற்கண்ணி வந்தது தேருநின் கையணையிற்
பொலங்கலை யின்றலை யிற்றுயின் மாற்றும் புரிசங்கமே. 35

சங்க மலைக்குந் திருப்பாற் கடனெந்து தான்பயந்த [ப்
செங்கம லைக்குமுன் பிற்சென்ற தோமின்னுஞ் செம்மலும்போய்
பங்க மலைக்கு வழங்குபிரான் புகலூர் பயில்வார்
துங்க மலைக்குமி தொக்குமென் னேயன்னை சொல்லியதே. 36

சொல்லிய லைச்சங்க மேவிநின் றுயைய துய்யவன்னம்
புல்லிய லைச்சங்க மேய்புக லூர பொதுவர்குழற்
கொல்லிய லைச்சங்கம் வேவா விழியம்பு கோத்திளைத்த
மெல்லியலைச் சங்க ராவிடு மோவந்த வேள்கணையே. 37

வேய்ந்த சலஞ்சல மாகாமற் பாகத்து மின்னைவைத்தோர்
காய்ந்த சலஞ்சல மாகக் குனித்தவர் கார்க்கடல்வாய்
வாய்ந்த சலஞ்சல மாரஞ் சொரியும் வயற்புகலூர்த்
தோய்ந்த சலஞ்சல நூபுரப் போதென் றுயர்கெடவே. 38

துயரந்த காம லெவருந் தொழும்புக லூரர்செந்தீக்
கையரந்த காரங் குடிகொண்ட கண்டர் கவுரிபங்கர்
பெயரந்த காலத் துதவுமெம் பால்வரும் பெற்றியைநீ
அயரந்த காவந்தச் சேவடி தானென் னரணென்பதே. 39

என்பணி யத்தர் திருப்புக லூர ரிளைத்திமையோர்
முன்பணி யத்தழ னஞ்சையுண் டோர்முது வாளெயிற்று
வன்பணி யத்தர் மழவிடை மேலிம் மறுகில்வந்தென்
மின்பணி யத்தனந் தந்துகொண் டேகினர் மேகலையே. 40

கலைக்கு முழைக்கும் பிரிவுகண் டாய்வெய்ய காமனின்ற
நிலைக்கு முழைக்கும் பழிவரும் போலு நிருத்தமெல்லா
மூலைக்கு முழைக்குந் தரும்புக லூர முதுமறைகள்
அலைக்கு முழைக்குன்று மென்னெஞ்சு மேவிய வாண்டகையே.

ஆண்டவம் பஞ்சுகொண் டாலைச் சிலைகொண் டனங்கனும்போர்
மூண்டவம் பஞ்சுக மெந்நாண் மொழிவது முத்தணிந்து
மாண்டவம் பஞ்சு தனத்தாண் மகிழும் வயற்புகலூர்த்
தாண்டவம் பஞ்சுரம் பாடநின் றுடிய சங்கரற்கே. 42

சங்குகைக் குத்தரல் வேண்டு மென்றேற்குயிர் தானலரான்
மங்குகைக் குத்தர மொன்றுஞ் சொல்லார்மரு வார்புரந்தீப்
பொங்குகைக் குத்தர வெற்பெடுத் தோர்புக லூரர்பொல்லா
வெங்குகைக் குத்தர வென்பார்க் கொழிக்கும் விழிச்செல்வரே.

விழிய னலங்கணை மாரற் களித்தவன் மெய்வழுவா
மொழிய னலங்கரத் தேந்திய வீர முராரிசெல்லா
வழிய னலங்கலை சூழ்புக லூரன் மடைப்பள்ளியாங்
கழிய னலம்கவர்ந் தேகினர் தேர்வரக் காண்கிலமே. 44

காணப் பணிமன்று ளாடிய காலுமென் கன்மனமும்
பூணப் பணியறம் வேறில்லை காண்புக லூரரசே
சேணப் பணிமுடி யாயடி யேன்பிழை செய்கையெல்லாம்
பேணப் பணியுனக் கென்னையெந் நாளும் பெருந்தகையே. 45

தகைமாலை யாகத்தை வெல்புயத் தேயணை தையனெஞ்சிற்
புகைமாலை யாகப் பசப்பைத் தணிபுக லூரரசே
பகைமாலை யாகவந் தைந்தல ராலுமிப் பாவையைவேள்
வகைமாலை யாகத் தொடுத்தா னினியென்ன வாசகமே. 46

வாசவ னந்தரந் தூர்க்கின்ற சோலை வயற்புகலூர்
ஈசவ னந்தர விக்கதி ரோவெண் டிசாமுகமுங்
கூசவ னந்தர வந்தநஞ் சோவெனக் கொள்ளைநிலா
வீசவ னந்தர மாரனுந் தோன்றினன் விற்குனித்தே. 47

குனித்தரங் கத்துறை தென்புக லூரர் குலவுசென்னிப்
பனித்தரங் கத்துறை யாரரு ளாற்பட முஞ்சமைத்து [ன்
மனித்தரங் கத்துடன் வெண்ணீறும் பெண்ணை மடலும்பெற்றே
இனித்தரங் கத்துங் கடற்புவி காணமன் றேற்றுவனே. 48

ஏற்றர விந்தப் புனிதைநின் றேத்த விமயவில்லான்
மாற்றர விந்தப் புரந்தீய வெய்தவர் வண்புகலூர்ச்
சேற்றர விந்தத் திருமா ளிகைசென்ற தெய்வமின்னந்
தோற்றர விந்தப் புனத்துள தோகணி சொல்லுகவே. 49

சொல்லலை யாறு சமயத்தையு மின்ப துன்பமென்னும்
அல்லலை யாறுனக் குள்ளே யறியறி வேபழன
மல்லலை யாறு நள்ளாறு வெண்காடு மருதுகந்தோன்
ஒல்லலை யாறு சடையில்வைத் தோன்புக லூரனையே. 50

ஊராக வன்பகை யன்னையு மப்படி யுன்னையெய்த
போராக வன்படை யென்னை விடாதுகைப் போதுகொண்டு
சீராக வன்பணி தென்புக லூர திருமிடறு
காராக வன்பம ரர்க்களித் தாய்முடிக் கங்கையனே. 51

கங்கையம் போருகம் வந்தவம் பாய்வரக் கண்டணிந்தாய்
வெங்கையம் போருக வென்றகை யாயன்று வெற்பளித்தான்
கொங்கையம் போருக மோப்பக் குழைபுக லூரமதன்
செங்கையம் போருக வெந்தபின் போதச் செயம்பெற்றதே. 52

பெற்றத் துவந்திவ் வகலிடத் தேற்கும் பிரான்புகலூர்
நற்றத் துவந்திகழ் மேனியன் வெற்பினி ஞங்களஞ்சு
மற்றத் துவந்திப மன்றுகொன் ருவி யளித்தவற்கோ
முற்றத்து வந்திம் முரசநின் ருர்த்து முழங்குவதே. 53

முழங்கா ரணம்பயி லும்புக லூரரிம் மூவுலகின்
கிழங்கா ரணங்கொரு பாலுடை யார்கிரி மீதிருக்கும்
பழங்கா ரணர்தம் பவனிகண் டார்க்குயிர்ப் பாடொழிய
வழங்கா ரணந்தரு மாரறம் பாய மதுமலரே. 54

மலராக வைங்கணை விற்கரும் பாக வடிவிலிநின்
றலராகவுஞ் செய்யு மாண்மை யெல்லாமன்று பார்த்தகண்ணுற்
பலராக வண்டு பயில்புக லூரரும் பார்த்தருளார்
நலராக வன்பு கொண்டா யிழைசோரு நடுக்கமுற்றே. 55

நடுக்கண் டனையல்லை கொங்கைகண் டாயல்லை நண்பவென்றன்
இடுக்கண் டனையிப் படியோ தணிப்ப திமயவெற்பில்
வடுக்கண் டனையொரு பாகனைப் பூக வயற்புகலூர்க்
கடுக்கண் டனையு மலைத்தது மாரன் கடுங்கணையே. 56

கடுங்கால கால புகலூ ரிறைவவென் காதலினுட்
படுங்கால காலங்க ளாகிநின் ரேய்பதி ஞலுலகு
நடுங்கால கால மெனவே வருமிற்றை நாண்மதியஞ்
சுடுங்கால கால மரணமுண் டோதொழுந் தோகையர்க்கே. 57

தோகைக் குமார வரைமார் பளித்த துயரமெல்லாம்
போகைக் குமாரன் பொருவது பார்க்கிலிர் போர்கடந்த
வாகைக் குமாரன் வணங்கநின் றீர்மள்ளர் வான்கரும்பால்
ஆலைக் குமார வயற்புக லூரி லருந்தவரே. 58

அருந்தவ ரந்தணர் நால்வருந் தேவரு மாகியன்றங்
கிருந்தவ ரந்தண் வயற்புக லூர ரிமயவெற்பிற்
றிருந்தவ ரந்தரு கூர்வே லொருவர் திருநெடுங்கண்
முருந்தவ ரந்த முறுவல்கெட் டேனென் மொழிவதுவே. 59

மொழிப்பா கருந்தியுங் கொங்கையிற் ரேய்ந்து முந்நீர்ப்பிறந்த
பழிப்பா கருந்திகைப் பாறின முத்தம் பருந்தரசின்
வழிப்பா கருந்தியில் வந்தவ ரத்தர் மணிக்குழைதோய்
விழிப்பா கருந்திய நீர்ப்புக லூரன்ன மென்கொடியே. 60

கொடியா தரிக்கு மிடத்திருப் பாக குறிக்க வென்று
முடியா தரிக்கு மெனும்புக லூரவென் மொய்குழற்கு
விடியா தரிக்கு முலேமேல் வடமுயிர் மெய்யிற்சற்றுந்
துடியா தரிக்குங் கடைமணி நாவிற்குந் தோற்றமுண்டே. 61

தோற்றந்த மாவி வனசமென் கொங்கைபங் கன்சுருதி
போற்றந்த மாவின் வரும்புக லூரான் பொருப்புமின்பாற்
கூற்றந்த மாவின் வடுவகிர் போலுருக் கொண்டுலவு
மேற்றந்த மாவிகொண் டுய்வார் தமக்கிது வெற்பலவே. 62

வெற்பா சனத்தர் திருப்புக லூரர்தம் மெய்யிற்றுய்ய
பொற்பா சனத்தர் முடிக்கங்கை நாதர் புவிபடைத்த
நற்பா சனத்தர் பலிக்ககந் தோறு நடந்துபெற்ற
வற்பா சனத்த ரமுதா சனத்தர்க் கரியவரே. 63

அரிய தரத்த மருந்திடு கங்குலென் ருனையஞ்சித்
திரிய தரத்த மயில்பொருட் டாவரல் செய்யகையாற்
கரிய தரத்த நஞ்சேற்றுண் டபோது கலந்தமுதே
புரிய தரத்தனஞ் சேர்புக லூரர்தம் பொன்வரைக்கே. 64

வரைத்தவ ரால மராரெயின் மூன்று மடியச்செந்தீ
நிரைத்தவ ரால மராதித் திருமுனி நீருடன்வந்
திரைத்தவ ரால மராவதி காத வெழும்புகலூர்
உரைத்தவ ரால மராவிட வாட லுகந்தவரே. 65

உகந்தந்த வாமத் திடத்தே யொருத்தியை வைத்தொருத்தி
சுகந்தந்த வாமுடி யாளவைத் தோன்றெல்லே யாமகத்தின்
அகந்தந்த வாரணத் தையன் பணிபுக லூரனண்ணி
முகந்தந்த வாவெனக் காற்று தொழிகை முறைமையன்றே. 66

அன்றிருக் கைக்கும் முதலாய பூதத் தடைவைநல்க
நின்றிருக் கைக்குத் திருக்கைதந் தாளினு நீண்முடிமேற் [லென்
சென்றிருக் கைக்குமங் கைக்குமே லென்கொல் சிந்தையி
வன்றிருக் கைக்குலேக் கும்புக லூரின் மகிழரசே. 67

அரசம லங்கு தடந்தோறு நீலமு மம்புயமும்
விரசம லங்கு புனற்புக லூரரை மெய்ப்படவே
பிரசம லங்கு மலர்க்குழ லாதிலே பெற்றதிட்டு
பரசம லங்குல வும்பவம் போங்தொழும் பத்தர்களே. 68

பத்தரத் தத்தி லறுக்கு முத்திப் பதங்கொடுக்கும்
பித்தரத் தத்தி லணங்குடை யார்பெற்ற மூருமையர்
புத்தரத் தத்தின் மலர்போல் பவர்புக லூரரொன்ஞர்
சுத்தரத் தத்திற் குளித்தொளி ராகின்ற சூலத்தரே. 69

சூலத் திருப்புக்குத் தெவ்வீழ் சுடலைத் துகளணிந்த
சீலத் திருப்புக்கு வான்போற் றுவவுமை செய்யகண்டத்
தாலத் திருப்புக்குந் தென்புக லூர்பதி யானதற்கு
நீலத் திருப்புக்கு வாழ்கின்ற பாகத்து நீர்மைக்குமே. 70

மைக்கு வளைக்குத் துயிலுக்கு மால்விடை முன்ஞெழுத
கைக்குவ ளைக்கும் வளைத்திட வாருங் கனங்குழையீர்
அக்கு வளைக்குழை யாகத்தர் காதரெட் டானைநின்ற
திக்கு வளைக்கு மெயிற்புக லூரர்தந் தேர்வரினே. 71

தேரிர விக்குமுற் காகள மானமுட் சேவலில்லா
ஊரிர விக்குப் பகையா யினபுக லூரிறைவர்
பேரிர விக்கு நகப்பூண் டவர்கொன்றை பெய்வளையீர்
தாரிர விக்கும் படியெங்ங னீரித் தழலெனக்கே. 72

என்னையன் பாலடித் தொண்டுகொண் டோன்புக லூரனில்லா
அன்னையன் பால னருந்தமிழ்ப் பாவ னறுமுகத்தோன்
றன்னையன் பாலனங் காளநின் ஞேனடி தாழ்குலத்துப்
பின்னையன் பாலரி தாமெளி தாமன்பர் பேதைமைக்கே. 73

பேதம் பலவன் பிதாவும் பிதாமக னும்பழமை
ஓதம் பலவன் புகலூர் மருங்கி ஞெளிசிறந்த
சூதம் பலவன் புயர்சோலை வல்லி சுடர்க்குழைமேற்
போதம் பலவன் பகைகாணின் கொங்கை புவிதனக்கே. 74

தனக்கன கற்பகஞ் சங்குசிந் தாமணி தாமரையே
உனகன கக்கைக ளென்றும் பிறரை யுரைத்திளைத்தே
னனகன கத்தும் புகலூ ரிடத்து மமர்ந்தவனே
நினகன கத்தும்பை யிட்டாரொ டென்றென்னை நீவைப்பதே. 75

வைப்போ ரரிக்கு மழல்போன் மெனவங்தென் வன்பிறப்பை
நைப்போ ரரிக்கு நகையொழித் தோரற்றை நாள்விசயன்
கைப்போ ரரிக்குக் கமுகோடி கல்புக லூரர்கருப்
பைப்போ ரரிக்குத் தசவவ தாரம் படைத்தவரே. 76

படையிலங் கைக்குரங் கைப்படை யாகப் படைத்துவெற்றி
அடையிலங் கைக்குலஞ் செற்றவ னென்றறி யாமலந்த
விடையிலங் கைக்கு மரிதேடி யபுக லூரரென்றன்
கிடையிலங் கைக்குயிர் மாறுமுன் வந்து கிடைப்பவரே. 77

கிடைப்ப ரவைக்கும் பதினு லுலகிற்கும் கேசவற்கும்
படைப்ப ரவைக்குமற் றியாவைக்குந் தோற்றம்வன் பாதலத்துப்
புடைப்ப ரவைக்குறித் தாடும்பி ரான்புக லூரனன்ன
நடைப்ப ரவைக்குத் திருத்தூது சென்ற நளினத்திலே. 78

நளிநகத் தாமரைத் தாதையு மொக்கு நகுதலைகொய்
ஒளிநகத் தாமரைக் கைப்புக லூரரை யூருகின்ற
நெளிநகத் தாமரை வேள்விக்கு நீத்ததென் னீலவண்ணக்
கிளிநகத் தாமரை மாத்திரைக் கேதலை கெட்டனரே. 79

கெட்ட விருப்பு மனமே யுனக்கொன்று கேண்மடவார்
தொட்ட விருப்பு மெய்யென்று கொள்ளாது சுடர்ப்பவளம்
விட்ட விருப்பு வளைபுக லூரரை மேவுநமக்
கிட்ட விருப்புச் சிவலோக மாக்குவ ரிப்பொழுதே. 80

பொழுதுகத் தும்பெரி தான திராவென்றன் பூவைகொன்றைக்
கழுதுகத் தும்பைச் சரகுங் கொடானைய மேற்குமையன்
கழுதுகத் துஞ்சுடு காட்டகத் தாடி கபாலியென்னும்
பழுதுகத் துள்ள வற்கோ புகலூரைப் பதியென்பரே. 81

பதியையன் றூலு மரியும் பணிபுக லூரன்பண்டை
விதியையன் றூநகு சென்னிகொய் தோன்செய்த வேணியின்மேல்
நதியையன் றூடு மமுதத்து முன்வந்து நாளுமிந்த
மதியையன் றூயினெத் தெய்வத்தை யான்றொழு மற்றிலையே. 82

மற்றிலை யாவி தளரும் பொழுதுமுன் வந்துநிற்பார்
நற்றிலை யாடக மன்றுடை யாரன்றி நாமவரைப்
புற்றிலை யாபுக லூரிலை யாவெனப் போற்றியின்றே
சற்றிலை யாயினுந் தூவுநெஞ் சேபினைச் சாவிலையே. 83

சாவிலை யாகவக் காமனைச் செற்ற தழற்கண்ணனே
மூவிலை யாகவ வேற்படை யாய்முதல் வாகமலப்
பூவிலை யாக வண்டுகள் பூச விடும்புகலூர்க்
கோவிலை யாகவ லாவமும் பேதைநின் கொன்றையென்றே. 84

என்றை யலங்கலே கொள்வா னென்றுசென் றேத்திநின்பொற்
கொன்றை யலங்கலே நல்கென வாருங் குறிக்கவொட்டா
ஒன்றை யலங்கலே நான்மறை யோர்பெற வுண்மைசொன்ன
நன்றை யலங்கலே நீர்ப்புக லூரனை நாம்பணிந்தே. 85

பணிப்பா யலேயுடைப் பச்சைப் பொருப்பொரு பாகத்தனே
மணிப்பா யலேவளை தென்புக லூரவென் மையல்வந்து
தணிப்பா யலேயது தானிற்க யாமந் தனிவிளைத்தேன்
துணிப்பா யலேநகை தோற்றுனை யென்னெதிர் தோற்றுவித்தே.

தோற்றுவ ராக வரிபணி யும்புக லூரன்றுய்ய
நூற்று வராக வரனரு ளோவென்பர் நுண்ணிடையைப்
போற்றுவ ராகவ வேல்விழி பார்ப்பர்நின் பொன்னடிவீழ்ந்
தாற்றுவ ராக வணங்கே யிவைமன்ன ராதரவே. 87

ஆதர வாமனம் வெற்பிற் குயிலுட ஞயினிந்த
மாதர வாமன மீளவி டாததென் வண்புகலூர்ச்
சீதர வாமன வென்னநின் றேன்பணி சேவடியாய்
பூதர வாமன வாநகை யாநின் புகழ்நினைந்தே. 88

நினையா வருந்து நகைக்கு முயிர்க்கு நினதுகொன்றை
புனையா வருந்துயர் போவதெப் போதெனும் பூவுநெல்லுஞ்
சினையா வருந்துந் திருப்புக லூரவென் சேயிழையின்
றுணையா வருந்துதிக் குந்திரு நாம முரைத்தழுமே. 89

அழவிடைக் கேயுரல் கட்டுண்டு பின்வர வாயர்வெண்ணெய்
தழவிடைக் கேசவன் காணுத பங்கயஞ் சுற்றமெல்லாம்
விழவிடைக் கேயுயிர் கால்வைத் தலமரும் வேலைவெள்ளை
மழவிடைக் கேவருந் தென்புக லூர்தொழ வல்லவர்க்கே. 90

வல்லிக் குழைமலே வார்த்தைக்கண் வெண்ணகை வால்வளைக்கை
வல்லிக் குழைமலே காந்தளொப் பீர்மலே யான்மகிழும்
வல்லிக் குழைமுலே பாடிநின் முடி வரும்புகலூர்
வல்லிக் குழைமுலே யாந்தாளி நாளை மலர்கின்றதே. 91

மலரப் பணையி லுழைவிழி நீருமிவ் வல்லிரவும்
புலரப் பணையி லுழையழன் மாறிடப் பூங்கைமள்ளர்
அலரப் பணையி லுழையெழுஞ் சேலொ டமர்தொலைந்த
பலரப் பணையி லுழைபுக லூரகண் பார்த்தருளே. 92

அருளோ தனம்பெறி னுள்ளவர் பின்சென் றளகமுமக்
கிருளோ தனங்குவ டோவென் பரேசில ரின்பணில
முருளோ தனந்தும் புகலூ ரரைத்தொழி னுண்மையிம்மை
பொருளோ தனந்துகி லின்பந் தருவர் புரிகிலரே. 93

புரிதவத் தைக்குறித் தந்தணர் வாழ்புக லூரரசே
கிரிதவத் தைக்கு மயிற்கை யனத்த கிளர்மறையின்
சரிதவத் தைக்கடந் தப்பாலு மாய்நின்ற சங்கரனே
அரிதவத் தைக்குநின் றாளருள் வாயென் னவசத்திலே. 94

அவசங்க ராசலங் கொண்டுநின் பேர்சொல வாழியங்கைத்
துவசங்க ராவிழத் தோற்றுவித் தோய்தொலை யாநிலவை
நவசங்க ராசி தரும்புக லூரவென் னுவைக்கொண்டு
சிவசங்க ராவென மாட்டே னெனக்குன் றிருவுளமே. 95

திருப்பதத் தத்தி கிரிக்கரி வீழ்சிவ னுக்கிருப்புப்
பருப்பதத் தத்தி யுரிபோர்வை பாய்புலித் தோலுடுக்கை
நெருப்பதத் தத்திற் புகலூரர் நாம நிலாமுடிப்ப
திருப்பதத் தத்தி லிளமயின் மூவெயி லெய்ததுவே. 96

எய்தவந் தப்புரங் காட்டிய வேளு மெரிநகையாற்
பெய்தவந் தப்புரப் பேறுபெற் றுன்பெற்ற தாதைசென்னி
கொய்தவந் தப்புர மாதின்பொற் றேளிணை கூடுதற்கு
மொய்தவந் தப்புர வோன்புக லூரன் முருக்கிடவே. 97

முருகவி ராமன் முடியா முடிவின் முதல்வவென்று
பெருகவி ராமன் பணிபுக லூரவென் பேதைநெஞ்சம்
பருகவி ராமன் மதன்வரும் போது பவளஞ்செவ்வி
தருகவி ராமன் பிலர்க்குரு வென்னுந் தனியடைந்தே. 98

அடைக்கல னுனுன் னடித்தா மரையிணைக் கைந்தெழுத்தாம்
படைக்கல னுவிலுண் டஞ்சே னெவர்க்கும் பணிமொழியார்
உடைக்கல னுணல முள்ளம் பலியொ டுகந்து கொள்ளு
முடைக்க லனுத புகலூர யாவர்க்கு முன்னவனே. 99

முன்னஞ் சயிலத் தருகவென் றேற்றது முல்லைப்பச்சை
அன்னஞ் சயிலத் தையாற்று மென்றேவரி யோடமரர்
வென்னஞ் சயிலத்தர் தென்புக லூரையர் மேருவென்னும்
பொன்னஞ் சயிலத் திருச்சிலை வாங்கிய பூவொன்றிலே. 100